1 புத்தகசாலை

பாரதிதாசன் (1891 - 1964)

பாரதிதாசன் தென்னிந்தியாவின் பாண்டிச்சேரியில் பிறந்தவர். கனக சுப்பு ரத்தினம் என்ற தன் பெயரை பாரதியின் மீது கொண்ட ஈடுபாட்டின் காரணமாகப் பாரதிதாசன் என்று ஆக்கிக்கொண்டார். ஆசிரியராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றிய இவர், திராவிடக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டார். வீரத்தாய், அழகின் சிரிப்பு, போர் மறவன், பாண்டியன் பரிசு, இருண்ட வீடு முதலான படைப்புக்களையும் ஆக்கியுள்ளார்.

இன்று இணையம் பெற்றிருக்கும் இடத்தை ஒருகாலத்தில் நூலகம் பெற்றிருந்தது. கலை, இலக்கியம், அறிவியல் அனைத்தும் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டிருந்தன. ஓலைச் சுவடிகள் செல்வந்தர்களிடமும் குறிப்பிட்ட சிலரிடமும் முடங்கிக் கிடந்த நிலையில் அச்சு இயந்திரத்தின் வருகையுடன் இவைகள் பதிப்பிக்கப்பட்டு நூல்களாகப் பல்கிப் பெருகி அறிவுத்தாகம் நிறைந்தவர்களைச் சென்றடைந்தன. பின்னர் இந்நூல்கள் நூலகத்தில் குவிந்தன. இக்கவிதையும் நூலகத்தின் மீதான ஈர்ப்பு, அது ஏற்படுத்தும் தாக்கம் ஆகியவற்றை விபரிக்கின்றது.

தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்ததொரு வேளைதன்னில்,
இனித்தபுவி இயற்கையெழில் எல்லாம் கண்டேன்;
இசைகேட்டேன்! மணம்மோந்தேன்! சுவைகள் உண்டேன்!
மனிதரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சின்
மகாசோதியிற் கலந்த தெனது நெஞ்சும்!
சனித்ததங்கே புத்துணர்வு! புத்தகங்கள்
தருமுதவி பெரிது! மிகப்பெரிது கண்டீர்!

மனிதரெலாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்,
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை;
புனிதமுற்று மக்கள் புது வாழ்வுவேண்டில்
புத்தக சாலை வேண்டும் நாட்டில்யாண்டும்.

தமிழர்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச்சாலை
சர்வகலா சாலையைப்போல் எங்கும்வேண்டும்.
தமிழிலிலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்.
அமுதம்போல் செந்தமிழிற் கவிதைநூற்கள்,
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூற்கள்,
சுமைசுமையாய்ச் சேகரித்துப் பல்கலைசேர்
துறைதுறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல்வேண்டும்

நாலைந்து வீதிகளுக் கொன்று வீதம்
நல்லதுவாய் வசதியதாய் இல்லம் வேண்டும்.
நூலெல்லாம் முறையாக ஆங்கமைத்து
நொடிக்குநொடி ஆசிரியர் உதவுகின்ற
கோலமுறும் செய்தித்தாள் அனைத்தும் ஆங்கே
குவிந்திருக்க வகைசெய்து தருதல் வேண்டும்.
மூலையிலோர் சிறுநூலும் புதுநூலாயின்
முடிதனிலே சுமந்து வந்து தருதல் வேண்டும்.

வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும்
மரியாதை காட்டி அவர்க் கிருக்கை தந்தும்,
ஆசித்த நூல்தந்தும் புதிய நூல்கள்
அழைத்திருந்தால் அதையுரைத்தும், நாளும் நூலை
நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம்
நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்
மாசற்றதொண் டிழைப்பீர்! சமுதாயச்சீர்
மறுமலர்ச்சி கண்டதென முழக்கஞ் செய்வீர்!.

அரும்பதங்கள்

சையோகம்	- *இணைந்திருத்தல்*
சனித்தது	- *பிறந்தது*
கோலம்	- *அழகு*
மாசற்ற	- *குற்றமற்ற*
சுவடிச்சாலை	- *ஆவணக் காப்பகம்*
ஆசித்த	- *விரும்பிய*

பொருளுணர் திறன் செயற்பாடு

1. புத்தக வாசிப்பில் மூழ்கியபோது கவிஞர் எவற்றைக் கண்டதாகக் குறிப்பிடுகின்றார்?

2. **புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்** என்று கவிஞர் கூறுவதற்கான காரணங்கள் எவையெனக் குறிப்பிடுக.

3. கவிஞர் காண விழையும் நூலகம் எத்தகையது என்பதைத் தெளிவுபடுத்துக.

4. பின்வரும் அடிகளின் இலக்கியச் சிறப்புகளை விளக்குக.
   அ. மகாசோதியில் கலந்த தெனது நெஞ்சம்!
   ஆ. அமுதம்போல் செந்தமிழிற் கவிதைநூற்கள்.
   இ. மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
   தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கி.

குழுமச் செயற்பாடு

தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பற்றிய தகவல்களைத் திரட்டி அவற்றைக் கால அடிப்படையில் அட்டவணைப்படுத்திக் காட்சிப்படுத்துவோம்.

திறன் வளர் செயற்பாடு

'வாசிப்பு மனிதனைப் பூரணத்துவமுடையவனாக்கும்' என்ற தொனிப் பொருளில் சொற்பொழிவு ஒன்றை ஆற்றுவோம்.

2 பத்தி எழுத்துக்கள்

கவிக்கோ அப்துல் ரஹ்மான்

தமிழகத்தைச் சேர்ந்த இவர் கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். கவிஞர், பத்தியாளர், ஆய்வாளர், பேச்சாளர் என்று விரிவடையும் இவரது ஆளுமையின் அறுவடைகளாக முட்டை வாசிகள், சொந்தச் சிறைகள், அவளுக்கு நிலாவென்று பெயர் முதலான நூல்களையும், புதுக்கவிதையில் குறியீடு என்ற ஆய்வு நூலையும், பால்வீதி, சுட்டுவிரல் முதலான கவிதைத் தொகுப்புகளையும் கூறலாம். ஹைகூ, கஸல் முதலான பிறமொழிக் கவிதை வடிவங்களையும் தமிழில் பரப்பியவர்.

பத்தி எழுத்து என்பது பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கிய பின்னர் தமிழுக்குக் கிடைத்த புதியதொரு வடிவமாகும். கட்டுரைக்குரிய மரபுகளை மீறி ஆக்கப்படும் இந்த வடிவம் ஒரு வகையில் படைப்பாக்கமாகவே அமைகிறது. இங்கு இடம்பெறும் இந்த இரண்டு பத்திகளும் எடுத்துக்கொண்ட விடயங்களைப் புதிய நோக்கில், புதிய நடையில், புதிய பாணியில் விபரிக்கின்றன.

அ. மரம் என்பது உயர்திணை

சாலையில் நடக்கிறேன். இருபுறமும் மரங்கள். மலர் சொரிந்து என் பயணத்தை ஆசீர்வதிக்கும் மரங்கள். வெயிலுக்குக் குடை பிடிக்கும் மரங்கள். நான் களைப்படையும் போதெல்லாம் தாய்ப் பாசத்தோடு தங்கள் மடியில் என்னை ஆசுவாசப்படுத்தும் மரங்கள்.

நன்றி என் கண்களில் சுரக்கிறது.

மனிதனின் வாழ்க்கைப் பாதையைப் பார்க்கிறேன். அங்கும் வரிசையாக மரங்கள்.

அவன் குழந்தைப் பருவத்தில் தொட்டிலாகி, நடைபழகும் பருவத்தில் நடை வண்டியாகி, பள்ளிப் பருவத்தில் ஏடுகளாகி, மணப்பருவத்தில் கட்டிலாகி, கிழப்பருவத்தில் ஊன்றுகோலாகி, இறந்த பிறகும் பாடையாகி சிதையிலும் உடன்கட்டை ஏறி அவன் சாம்பலோடு சாம்பலாகிக் கலந்து - மனிதனுக்காகவே தங்களை முற்றிலும் அர்ப்பணம் செய்யும் மரங்கள்.

மனிதனின் தாகத்திற்குப் பானம் தந்து, பசிக்கு உணவூட்டி, உடுத்த உடையாகி, வசிக்க வீடாகி, நோய்க்கு மருந்தாகி, அவன் பயணத்திற்குச் சக்கரங்களாகி, அவன் வேலைகளில் கைகளுக்குக் கைகளாகி, அவன் சுவாசத்திற்காகக் காற்றைச் சலித்துக் கொடுத்து, அவனுக்காக மேகங்களைக் கெஞ்சிப்பிச்சைக் கேட்டு, - ஓ! மரங்கள் மட்டும் இல்லையென்றால் மனிதன் வாழ்ந்திருப்பானா?

சரித்திரச் சாலையைப் பார்க்கிறேன். அங்கும் மரங்கள்

அதோ! போதி மரங்கள்; பாவ வெயில் மறைக்கும் அறக் குடைகள்.

அதோ! காவல் மரங்கள்; ஊர்ப் பொது மன்ற மரங்கள்; பொருட்பாலின் அத்தாணி மண்டபங்கள்.

அதோ! வசந்த மரங்கள்; மன்மதனின் அம்பறாத் தூணிகள்; வாலிபங்கள் பள்ளியறைப் பாடம் கற்கும் பள்ளியறைகள் .

அதோ! கல்லால மரங்கள்; வீட்டு நெறிக்குக் கைகாட்டும் மரங்கள்.

மனிதனைப் பார்க்கிறேன். அவன் மரத்திலிருந்தே கோடரிக் காம்பு செய்து கொண்டிருக்கிறான். தருகின்ற தருக்களின் தயவில் வாழ்ந்தாலும் மனிதன் நன்றி கெட்டவனாகவே இருக்கிறான்.

மனிதனை 'மரமே' என்றால் கோபித்துக் கொள்கிறான். நானோ மரத்தை வச வாக்கியவனைக் கோபிக்கிறேன். மரம் என்பது வசவா?

மனிதன் மரமாக முடியுமா? மனிதனுக்கும் மரத்திற்கும் எவ்வளவு வேறுபாடுகள்!

மண் மனிதனுக்குப் புதை குழி; மரத்துக்கோ கருவறை.

மனிதன் தன்னை மண்ணின் மைந்தன் என்று வெட்கமில்லாமல் சொல்லிக் கொள்கிறான். உண்மையில் மண்ணின் மைந்தர்கள் மரங்களே; மனிதர்கள் அல்லர்.

பிறந்த இடத்தில் பற்று வைத்து வரவு வைப்பவை மரங்கள். மனிதன் பிறந்த இடத்தைச் செலவு செய்கிறவன்.

மரங்கள் சாய்ந்தால் காட்டிலிருந்து வீட்டுக்கு வரும். மனிதன் சாய்ந்தால் வீட்டிலிருந்து காட்டுக்குப் போகிறான்.

மரம் புழுதியில் பூக்களையும், கழிநீரில் கனிகளையும் செய்கிறது. மனிதன் பூக்களில் புழுதியையும், கனிகளில் கழிநீரையும் செய்கிறான்.

மனிதர்களுக்கு ஒரே ஒரு சிபி; ஒரே ஒரு சீதாக்காதி. மரங்களில் எல்லாமே சிபிகள்; எல்லாமே சீதக்காதிகள்.

மரம் கொடுப்பதற்காகவே கைகளை நீட்டுகிறது. மனிதன் வாங்குவதற்காகக் கைகளை நீட்டுகிறான்.

மரம் அத்தனை கைகளாலும் கொடுக்கிறது; மனிதன் வலக் கையால் கொடுப்பதை இடக்கையால் வாங்கிக் கொள்கிறான்.

மரம் வானத்தை நோக்கியே வளர்கிறது; மனிதன் புழுதியிலேயே புரளுகிறான்.

மரமாகத்தான் முடியவில்லை; மரங்களைப் படைக்கவாவது மனிதனுக்குத் தெரிகிறதா?

இதோ! அவன் படைத்த மரங்கள்; தூக்கு மரங்கள், சிலுவை மரங்கள், கழு மரங்கள், கொடி மரங்கள். அத்தனையும் மாமிசப் பட்சிணி மரங்கள்; மலர்களைத் தின்று முட்களை உற்பத்தி செய்யும் மரங்கள்; வெயிலை விநியோகிக்கும் மரங்கள்.

இந்த அழகில் மனிதன் உயர்திணையாம்; மரம் அஃறிணையாம். சரிதானா?

பொருளுணர் திறன் செயற்பாடு

1. மரம் உயர்திணை என்பதற்கு பத்தியாளர் கூறும் காரணங்களை எழுதுக.
2. மரங்களுடன் மனிதனை ஒப்பிடுமாற்றிலுள்ள சிறப்புகளை விளக்குக.
3. இப்பத்தி எழுத்தாளர் தனது கருத்துக்களை முன்வைப்பதற்கு கையாண்ட உத்திகளை எடுத்துக்காட்டுக.
4. ஆசிரியரின் மொழி நடை சிறப்புப் பற்றி உமது கருத்துக்களைத் தருக.

ஆ. மென்மையே வாழும்

'வாழ்கை என்பது போராட்டம். இதில் வலிமையானவையே வாழும் (Survival of the fittest)' என்றார் டார்வின்.

ஆனால் சீன ஞானி கன்ஃபூஷியஸோ, ' மென்மையானவையே நீண்ட நாள் வாழும்' என்கிறார்.

கன்ஃபூஷியஸ் மரணப் படுக்கையில் இருந்தார்.

படுக்கையைச் சுற்றி அவருடைய சீடர்கள் கண்களில் நீரோடு நின்று கொண்டிருந்தனர்.

சீடர் ஒருவர் தழுதழுத்த குரலில்,'குருவே! கடைசியாக எங்களுக்கு ஏதாவது அறிவுரை கூறுங்கள்' என்றார்.

கன்ஃபூஷியஸ் தம் வாயைத் திறந்து காட்டி, ' என் வாயில் என்ன தெரிகிறது, பார் என்றார்.

சீடர் வாய்க்குள் பார்த்துவிட்டு, 'நாக்கு தெரிகிறது' என்றார்.

‘பற்கள் இருக்கின்றனவா?’ என்று கேட்டார் கன்ஃபூஷியஸ்.

‘இல்லை’ என்றார் சீடர்.

‘இதில் இருந்து என்ன தெரிகிறது?’ என்று கேட்டார் கன்ஃபூஷியஸ்.

‘எனக்கு ஒன்றும் தெரியவில்லை. நீங்களே சொல்லிவிடுங்கள்’ என்றார் சீடர்.

‘நாக்கு மென்மையானது. பல் வலிமையானது. நாக்கு நான் பிறந்ததிலிருந்து இருக்கிறது. பல் பிறகுதான் முளைத்தது. வயது முதிர முதிர என் பற்கள் விழுந்து விட்டன. நாக்கு அப்படியே இருகின்றது. நான் சாகும்வரை அப்படியே இருக்கும். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் வலிமையானவை சீக்கிரம் அழிந்துவிடும். மென்மையானவை நீண்ட நாள் இருக்கும். எனவே நீங்கள் மென்மையானவர்களாக இருங்கள். நீண்ட நாள் வாழ்வீர்கள். இதுதான் உங்களுக்கு என் கடைசிச் செய்தி’ என்றார்.

அவர் ஆவி பிரிந்தது.

கன்ஃபூஷியஸின் பார்வை (Observation) அற்புதமானது.

அது இயற்கையின் ரகசியங்களுள் ஒன்றைப் பார்த்துவிட்டது.

மென்மையானது சீக்கிரம் அழிந்துவிடும். வன்மையானது அழியாது என்பதுதான் பொது நம்பிக்கை.

வயதானால் பற்கள் விழுந்துவிடுகின்றன.

அவை அப்படி விழுவதற்குக் காரணம் அவற்றின் வலிமையே.

நாக்கு அப்படி விழுவதில்லை. காரணம் அதன் மென்மை.

நீர் மென்மையானது என்று நினைக்கின்றோம்.

ஆனால் அது வெள்ளமானால் கரைகளை உடைத்துவிடுகிறது. வலிமையான அணைகளைத் தகர்த்துவிடுகிறது. ஊர்களையே அழித்துவிடுகிறது.

நெருப்பு வன்மையானது. ஆனால் அந்த நெருப்பை மென்மையான நீர் அணைத்துவிடுகிறது. நெருப்பு அழியும். நீர் அழியாது.

காற்று மென்மையானது. ஆனால் அது புயலானால் பெரிய மரங்களைச் சாய்த்துவிடுகிறது.

புயலில் வலிமையான மரம் விழுந்துவிடுகிறது. மென்மையான நாணல் தப்பித்து விடுகிறது.

பூகம்பத்தில் மனிதன் கட்டும் வலிமையான வீடுகள் உடைந்து போகின்றன. மென்மையான சிலந்தியின் வீடு தப்பித்துவிடுகிறது.

வேர் மென்மையானது. கல் வன்மையானது. ஆனால் வன்மையான கல்லை மென்மையான வேர் பிளந்துவிடுகிறது.

வெப்பம் வன்மையானது. ஒளி மென்மையானது.

ஆனால் வெப்பம் பாயாத தூரத்துக்கு ஒளி பாய்ந்துவிடுகிறது.

வன்மையான பொருள்கள் நுழைய முடியாத இடங்களில் நீர் நுழைந்துவிடுகின்றது.

வன்மையான பொருள்கள் நுழையக் கடினமான உடலில் 'எக்ஸ்' கதிர்கள் நுழைந்து விடுகின்றன.

வலிமையானவர்களே போருக்கு அனுப்பப்படுகிறார்கள். அங்கே அவர்கள் மடிந்து போகிறார்கள்.

மென்மையானவர்கள் தப்பித்துவிடுகிறார்கள்.

பழங்காலத்தில் போர் மூண்டால் ‘முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் பத்திரமான இடங்களுக்குச் சென்றுவிடுங்கள்’ என்று அறிவிப்பார்கள்.

முதியவர்களையும், பெண்களையும், குழந்தைகளையும் அவர்களுடைய மென்மையே காப்பாற்றுகிறது.

வன்மை வன்மையின் மேல்தான் போர் தொடுக்கிறது.

வலிமைதான் பாதுகாக்கும் என்று நினைக்கின்றோம்.

வன்முறையை வாழ்க்கையாகக் கொண்ட ரவுடிகள் வன்முறையாலேயே அழிகிறார்கள்.

வலிமையான ரவுடிகள் சீக்கிரம் செத்துப் போகிறார்கள். மென்மையானவர்கள் நீண்ட நாள் வாழ்கின்றார்கள்.

‘வாளை உருவியவன் வாளாலேயே சாவான்’ என்கிறது பைபிள்.

வலிமையே வெல்லும் என்று நினைக்கிறோம்.

ஆனால் ஆங்கிலேயரின் வலிமையான படையை காந்தி அடிகளாரின் அகிம்சை வென்றதை வரலாறு காட்டுகிறது.

கொடியவர்களையும் இசை மென்மையானவர்களாக்கி விடுகிறது.

பாலைப் பண், வழிப்பறிக் கொள்ளைக்காரர்களின் கொடிய மனத்தையும் மாற்றி ஆயுதங்களைக் கீழே போட்டுவிடச் செய்யும் என்கிறார் பொருநராற்றுப்படையில் முடத்தாமக் கண்ணியார்.

ஆறலை கள்வர் படை விட, அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை

வன்மையின் வெற்றி அற்பமானது. மென்மையின் வெற்றி நுட்பமானது.

ஆண் வன்மையானவன். பெண் மென்மையானவள்.
இருவரும் மற்போர் புரிந்தால் ஆண் வென்று விடுவான்.
பெண் ஆணை அன்பால் வென்று விடுவாள்.

போர்க்களத்தில் மாவீரர்களையும் வென்ற வீரன், பாவையின் பார்வை அம்பு பட்டால் தோற்றுப்போய் அவள் காலடியில் விழுந்துவிடுகின்றான்.

‘போர்க்களத்தில் பகைவரும் அஞ்சும் என் வலிமை இந்தப் பெண்ணின் வதன வனப்புக்குத் தோற்று அழிந்து விட்டதே, ‘ஓ’ என அலறும் ஒரு போர் வீரனைக் காமத்துப் பாலில் காட்டுகிறார் திருவள்ளுவர்.

வன்மையின் வெற்றி புறவயமானது. மென்மையின் வெற்றி அகவயமானது. ஆண் புறவயமாகவே பெண்ணை ஆள முடியும். பெண்ணோ ஆணை அகவயமாக ஆள்கிறாள்.

வன்மையால் மண்ணைத்தான் பிடிக்க முடியும்.

மனங்களைப் பிடிக்க மென்மைதான் உதவும்.

வன்மையானவர்களுக்கு வரலாறு என்ற மயானத்தில் மட்டுமே இடம் கிடைக்கிறது.

மென்மையானவர்களுக்கோ அழியாத காவியங்களில் இடம் கிடைக்கிறது.

வன்மையின் வெற்றிக்கு அற்பாயுசு, மென்மையின் வெற்றிக்கோ தீர்க்காயுசு.

உண்மையில் மென்மையே வன்மை.

பொருளுணர் திறன் செயற்பாடு

1. குரு - சீடன் உரையாடல் மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்து யாது?
2. ‘மென்மையானது விரைவில் அழிந்துவிடும், வன்மையானது அழியாது’ என்ற கூற்றுக்கு முரணாகப் பத்தி எழுத்தாளர் கூறும் கருத்துக்களைத் தெளிவுபடுத்துக.
3. மென்மை குறித்த அப்துல் ரஹ்மானின் நோக்கினை விளக்குக.

குழுமச் செயற்பாடு

‘தாவரம்’ என்ற தலைப்பில் ஐந்து நிமிடத்திற்கு ஏற்ற வகையில் வீதி நாடகம் ஒன்றினை ஆக்கி நடித்துக்காட்டுவோம்.

திறன் வளர் செயற்பாடு

பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாமல் பத்தி எழுத்து ஒன்றினை ஆக்குவோம்.

★ நட்சத்திரங்கள் ★ சாவிகள் ★ நிறங்கள்

3 வாய்மொழிப் பாடல்

நாட்டார் பாடல்கள், கிராமியப் பாடல்கள் போன்ற பெயர்களால் வழங்கப்படும் இப்பாடல்கள் கிராமிய மக்களால் பாடப்பட்டவைகளாகும். நாட்டுக்கு நாடு, பிரதேசத்திற்குப் பிரதேசம், சமூகத்திற்குச் சமூகம் வேறுபட்டு ஒலித்தாலும் கூட்டு வாழ்வையும் அதன் இன்ப துன்பங்களையுமே இவை பாடுபொருளாய்க் கொண்டுள்ளன. தொன்மையும், இலக்கியச் செழுமையும் உடைய இப்பாடல்கள் நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களாலும், ஆர்வலர்களாலும் தேடித் தொகுக்கப்படுவதுடன், ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மருத்துவிச்சிப் பாடல் என்பது வாய்மொழிப் பாடல்களின் ஒரு கிளையாகும். வைத்தியர்களும், வைத்தியசாலைகளும் செல்வாக்குப் பெற்றிராத கிராமங்களில் மருத்துவிச்சியே பிரசவச் சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளாள். தாயையும், குழந்தையையும் பாதுகாத்த அவளுக்கு அரிசி, நெல், மிளகு முதலான பொருட்கள் வழங்கப்படுவதுண்டு. பிரசவம் பார்த்த மருத்துவிச்சி குழந்தையைக் கைகளில் தூக்கியவாறு பாடப்படும் பாடலே இப்பாடலாகும்.

மருத்துவிச்சி வாழ்த்து

அயலும் புடையும் வாழ வேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழ வேண்டும்
ஆச்சியும் அப்புவும் வாழ வேண்டும்
அம்மானும் மாமியும் வாழ வேண்டும்.

அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
அரிசி மலைநாடும் கண்டீரோ தம்பி?

நெல்லுப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
நெல்லு மலைநாடும் கண்டீரோ தம்பி?

மஞ்சள் பொதியோடும் வந்தீரோ தம்பி,
மஞ்சள் மலைநாடும் கண்டீரோ தம்பி?

மிளகுப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
மிளகு மலைநாடும் கண்டீரோ தம்பி?

உள்ளிப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
உள்ளி மலைநாடும் கண்டீரோ தம்பி?

இஞ்சிப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
இஞ்சி மலைநாடும் கண்டீரோ தம்பி?

உப்புப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
உப்பு மலைநாடும் கண்டீரோ தம்பி?

காசுப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
காசு மலைநாடும் கண்டீரோ தம்பி?

வேந்தர்க்கு வேந்தராய் வந்தீரோ தம்பி,
வேந்தர் மணிமுடியும் கண்டீரோ தம்பி?

கோச்சி வாழ கொப்பர் வாழ
பேத்தி வாழ பேரன் வாழ

பூட்டி வாழ பூட்டன் வாழ
கொம்மான் வாழ மாமி வாழ

குஞ்சியாச்சி வாழ குஞ்சியப்பு வாழ
பெரியாச்சி வாழ பெரியப்பு வாழ

ஊர் வாழ தேசம் வாழ
குருவுக்கும் சிவனுக்கும்
நல்ல பிள்ளையாய் இருந்து வாழ்க.

பொருளுணர் திறன் செயற்பாடு

1. மருத்துவிச்சியின் மனப்பாங்கு பற்றிய உமது கருத்தினை முன்வைக்குக.
2. குழந்தை எவ்வாறெல்லாம் வாழ வேண்டும் என மருத்துவிச்சி விரும்புகிறாள்?
3. இப்பாடலில் கிராமிய மண்வாசனை வெளிப்படுமாற்றினைத் தெளிவுறுத்துக.
4. **''வேந்தருக்கு வேந்தராய் வந்தீரோ தம்பி**
   வேந்தர் மணிமுடியும் கண்டீரோ தம்பி''
   இவ் அடிகள் மூலம் நீர் விளங்கிக் கொண்டதை விளக்குக.
5. இப்பாடல் பகுதியில் வெளிப்படும் அழகியல் உணர்வினை எடுத்துக் காட்டுக.

குழுமச் செயற்பாடு

நாம் வாழும் பிரதேசத்தில் வழக்கிலுள்ள நாட்டார் பாடல்களைத் தொகுத்து குறும்புத்தகம் ஒன்றைத் தயாரிப்போம்.

திறன் வளர் செயற்பாடு

படம் உணர்த்தும் கருத்துக்களை மையமாகக் கொண்டு பாடல் ஒன்றினை ஆக்கி அதனைக் கிராமிய மெட்டில் பாடுவோம்.

4 இனிது என

கணவன் - மனைவி ஆகியோரின் இல்லறப் பண்பாட்டைத் தமிழ் இலக்கியங்கள் செம்மையாகப் புலப்படுத்தி வந்துள்ளன. இவ்விரு பாடல்களின் உள்ளடக்கங்களும் ஒரே நேர்கோட்டில் பயணிக்கிறன. குறுந்தொகைப்பாட்டில் சித்திரிக்கப்படும் மனைவி, அமுதம் என்ற கவிதையில் சித்திரிக்கப்படும் கணவன் ஆகிய வார்ப்புகள் சிதையாத இல்லறத்தின் சிறப்பைக் காட்டுகின்றன.

அ. முளிதயிர்

கூடலூர்க்கிழார்

கூடலூர்க்கிழார் சங்ககாலப் புலவர்களில் ஒருவர். சங்கநூல் தொகுப்பில் இவரது நான்கு பாடல்கள் உள்ளன. செவிலித்தாய் கடிநகர் சென்று தன் வளர்ப்பு மகள் மகிழ்வாக வாழ்வதை அவளைப் பெற்ற நற்றாய்க்கு எடுத்துரைக்கும் பாடல் இது.

கடிநகர் - பெண் திருமணம் செய்துகொண்டு வாழும் இல்லம்

செவிலித்தாய் கூற்று

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழா அது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.

- கூடலூர்க்கிழார்

தன் அன்புக் கணவனுக்குக் குழம்பு வைப்பதற்கென மனம் வைத்தாள் தலைவி. கட்டித் தயிரைத் தன் காந்தள் போன்ற மென்மையான விரல்களால் பிசைந்தாள். அவ்வேளையில் நழுவிச் செல்லும் தன் உயர் ரக ஆடையின் பெறுமதியையும் பொருட்படுத்தாது அவ்விரல்களாலேயே சரி செய்து விடுகிறாள். தாளித்த புகை அவளது குவளை மலர் போன்ற கண்களைச் சூழ்ந்து வருத்திய போதிலும் தலைவனுக்கு தான் செய்யும் கறியின் சுவை கெட்டுவிடக்கூடாதே எனக் கருதி துளாவித் துளாவிச் சமைத்து விடுகிறாள். உணவருந்திய தலைவனோ புளிக்குழம்பினை இனிது இனிது எனக் கூறி விருப்புடனே உண்பதனால் ஒளிபடைத்த தலைவியின் முகம் மகிழ்ச்சியினால் பூரித்துவிட்ட அழகுதான் எத்தனை. இதுதான் அங்குள்ள நிலை என செவிலி தன் வளர்ப்பு மகளின் இல்லறப்பாங்கினைப் புகழ்ந்து பேசுகிறாள்.

அரும்பதங்கள்

முளிதயிர்	-	நன்கு தோய்ந்த கட்டித் தயிர்
கலிங்கம்	-	ஆடை
குய்	-	தாளிப்பு
கழும	-	நிறைய
பாகர்	-	குழம்பு

பொருளுணர் திறன் செயற்பாடு

1. இப்பாடலில் தலைவனிடத்தில் தலைவி கொண்ட அன்பு எவ்வாறு வெளிப்படுகிறது?

2. **முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்** இவ் அடியில் வெளிப்படும் அணிச் சிறப்பை எடுத்துக்காட்டுக.

3. தலைவியின் செயற்பாடுகளினூடாக வெளிப்படும் இல்லறப்பாங்கை விளக்குக.

ஆ. அமுதம்

சச்சிதானந்தன் (1921 - 2008)

கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் ஈழத்துக் கவிஞரும், எழுத்தாளரும் ஆவார். இவர் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர். இவரது முதற் சிறுகதை 'தண்ணீர்த்தாகம்' 1939 ஆம் ஆண்டு பெப்ரவரி 12 ஆம் நாள் ஈழகேசரிப் பத்திரிகையில் வெளிவந்தது. ஆனந்தன் என்ற புனைபெயரில் இவர் எழுதிய எட்டுச் சிறுகதைகள் 1939-1944 காலகட்டத்தில் ஈழகேசரியில் வெளிவந்தன.



மனைவி சமைத்துக் கொடுத்த உணவைப் பயணத்தின் இடையில் பிரித்து உண்ணத் தொடங்குகிறான் கணவன். அந்த உணவு அவன் உள்ளத்தில் ஏற்படுத்தும் உணர்வுகளை இப்பாடல் சித்திரிக்கின்றது.

தங்க வளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக்கமழு தையா - இதில்,
அங்கமெ லாம்மிகப் பொங்கி வழிந்திடும்
அன்புங் கலந்த தையா

கொட்டிய உப்புக் கசப்பதென்றாலுமுள்
கூடியினிக்கு தையா - இது
விட்டுப் பிரிகையிற் சொட்டுக் கண்ணீர்பட்ட
விண்ணின் அமுதமையா

சொன்னபடிநட வாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்த தையா - இது
சின்னஞ் சிறுகைக் குழந்தை யளைந்தது
தெய்வ அமுத மையா

ஆகக் கரிந்து பொரிந்ததென் றாலுமே
அன்பு மணக்கு தையா - இது
வேகவைக் காததென் றாலும் எனக்கொரு
விந்தை உருசி யையா

ஊது குழற்சத்தம் கேட்டவ திப்பட்டு
ஓடிவருகை யிலே - இது
பாதி வழிவந்து தாமரைக் கைதந்த
பச்சை அமுதமையா

கட்டிய அன்புக் கயிற்றினிற் சுற்றிய
கட்டுப் பொதியி தையா - இதைத்
தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல் லாமொரு
சோதி மிளிரு தையா.

பொருளுணர் திறன் செயற்பாடு

1. *மனைவி சமைத்த உணவைக் கணவன் எவ்வாறெல்லாம் புகழ்ந்துரைக்கின்றான்?*

2. ***விட்டுப் பிரிகையிற் சொட்டுக் கண்ணீர்பட்ட விண்ணின் அமுதமையா*** *இவ்வடியில் காணத்தக்க இலக்கியச் சிறப்பைக் குறிப்பிடுக.*

3. *அமுதம் என்ற தலைப்பு இக்கவிதைக்குப் பொருந்துமாற்றினை விளக்குக.*

குழுமச் செயற்பாடு

ஒரு குடும்பத்தின் மனமகிழ்ச்சிக்குக் காரணம் பணமா? மனமா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் ஒன்றை நடத்துவோம்.

திறன் வளர் செயற்பாடு

இல்லறப் பண்பாட்டை விளக்கும் வகையிலான சினிமாப்பாடல்களை உள்ளடக்கி இசையும் கதையும் பிரதி ஒன்றினை ஆக்குவோம்.

5 யேசு கிறிஸ்து

பாரதியார் (கி.பி 1882 - 1921)

இந்தியாவின் எட்டயபுரத்தில் பிறந்த இவர், இருபதாம் நூற்றாண்டின் நவீன கவிதை உருவாக்கத்தில் முன்னோடியாகத் திகழ்கின்றார். ஆயினும் மரபின் செல்வாக்கினை இவரது விநாயகர் நான்மணிமாலை முதலான இலக்கியங்களில் காண முடிகின்றது. கதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு, வசன கவிதை, கவிதை என்று விரியும் இவரது படைப்பாளுமைகள் கனதியானவை. சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் புலமை மிக்கவராக விளங்கினார்.

பாரதியின் தோத்திரப் பாடல்கள் அவரது விசாலமான மனதை, மானுடத்தைச் சித்திரிக்கின்றன. இப்பாடல் யேசு கிறிஸ்து பற்றி விபரிக்கின்றது.

‘ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்

எழுந்து யிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்’.

நேசமாமரியா மக்த லேநா

நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள்

தேசத் தீர் இதன் உட்பொருள் கேளீர்;

தேவர் வந்து நமக்குட் புகுந்தே

நாச மின்றி நமை நித்தங் காப்பார்;

நம் அகந்தையை நாம் கொன்று விட்டால்

அன்புகாண் மரியா மக்த லேநா

ஆவி காணுதிர் யேசு கிறிஸ்து;

முன்பு தீமை வடிவினைக் கொன்றால்

மூன்று நாளினில் நல்லுயிர் தோன்றும்;

பொன்பொ லிந்த முகத்தினிற் கண்டே

போற்றுவாள் அந்த நல்லுயிர் தன்னை;

அன்பெனும் மரியா மக்த லேநா

ஆஹா ! சாலப் பெருங்கிளி யிஃதே

உண்மை யென்ற சிலுவையிற் கட்டி

உணர்வை ஆணித் தவங்கொண்டடித்தால்

வண்மைப் பேருயிர் யேசு கிறிஸ்து

வான மேனியில் அங்கு விளங்கும்

பெண்மைகாண் மரியா மக்த லேநா

பேணும் நல்லறம் யேசு கிறிஸ்து

நுண்மை கொண்ட பொருளிது கண்டீர்

நொடியி லிஃது பயின்றிட லாகும்.

பொருளுணர் திறன் செயற்பாடு

1. யேசு கிறிஸ்துவின் மூன்றாம் நாள் உயிர்ப்பைப்பற்றி பாரதி நோக்கும் முறை யாது?

2. மரியாமதலேனா, யேசு கிறிஸ்து ஆகியோர் பற்றிய பாரதியின் சித்திரிப்புகளை விளக்குக.

3. இக்கவிதையில் இடம்பெறும் அணியினைக் குறிப்பிட்டு அதன் சிறப்புக்களை விளக்குக.

4. இக்கவிதையில் இடம்பெறும் எதுகைமோனைகளைக் குறிப்பிட்டு அவை ஏற்படுத்தும் சந்தத்தை (ஓசை) தெளிவுறுத்துக.

5. பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக.

அ. அகந்தை இ. மேனி
ஆ. வண்மை ஈ. நுண்மை

குழுமச் செயற்பாடு

பாரதியார் சமயங்களைப் பற்றிப் பாடிய பாடல்களைத் தொகுத்துச் சுவர்ப் பத்திரிகை தயாரிப்போம்.

திறன் வளர் செயற்பாடு

''மகாகவி பாரதியார்'' பற்றிய உரைச் சித்திரம் ஒன்றை ஆக்குவோம்.

6 கிட்கிந்தைப் படலம்

கம்பர்

சோழர் காலத்தைச் சேர்ந்த கவிச்சக்கரவர்த்தியே கம்பர் ஆவார். வட மொழியில் வால்மீகி பாடிய இராம கதையை தமிழ்ப் பண்பாட்டு செல்நெறியைத் தழுவி இராமாயணமாகப் பாடியுள்ளார். கம்பரின் புலமையை மையப்படுத்திப் பல்வேறு புனைவுகள் வழக்கில் உள்ளன. ஏர் எழுபது, சடகோபர் அந்தாதி, சரஸ்வதி அந்தாதி, திருக்கை வழக்கம் முதலிய சிற்றிலக்கியங்களையும், தனிப்பாடல்கள் சிலவற்றையும் இவர் பாடி இருப்பதற்கான சான்றுகள் உள்ளன.

கார்காலம் முடிந்ததும் சுக்கிரீவன் தன் சேனைகளுடன் வராது இருந்தான். இதனை அறிந்த இராமன் சினம் கொள்கிறான். எனவே இலக்குமணனைக் கிட்கிந்தைக்கு அனுப்பி வைக்கிறான். கிட்கிந்தையை அடைந்த இலக்குமணனைப் பற்றி வானரங்கள் அங்கதனுக்குத் தெரிவிக்கின்றனர். அங்கதன் சுக்கிரீவனிடம் செல்கிறான்.

சுக்கிரீவனோ மது மயக்கத்தில் அந்தப்புரத்தில் கிடக்கிறான். எனவே அங்கதனும், அநுமானும் தாரையிடம் சென்று இலக்குமணனின் வருகையை அறிவிக்கின்றனர். இலக்குமணன் வரும் வழியை வானரங்கள் கற்களைக் கொண்டு மூடிவிட இதனை உடைத்து விட்டு உள்ளே வருகிறான். இலக்குமணனின் வருகையை நிறுத்த தாரை தன் சேடியர்களுடன் முன்னே நிற்கின்றாள். இப்பெண்களைக் கண்டு இலக்குமணன் வெட்கப்பட்டு நிற்கின்றான். இப்பின்னணியை விபரிக்கும் வகையில் பின்வரும் பாடல்கள் அமைந்துள்ளன.

கார்காலம் கடந்தும் சுக்கிரீவன் வராமையால், இராமனும், இலக்குமணனும் ஆலோசித்தல்

1. அன்னகாலம் அகலும் அளவினில்,
முன்னை வீரன், இளவலை, ''மொய்ம்பினோய்!
சொன்ன எல்லையின் ஊங்கினும் தூங்கினன்;
மன்னன் வந்திலன்; என் செய்தவாறு அரோ?''

அரும்பதங்கள்

*(**முன்னம்** - சிங்கம்; **மொய்ம்பு** - வலிமை; **ஊங்கு** - மேலும்; **தூங்குதல்** - இருத்தல் / தாமதித்தலுமாம்)*

பொழிப்புரை

அத்தகைய கார்காலம் முடிந்த அளவில், மூத்தவனும், வீரனும், சிங்கம் போன்றவனுமான இராமன், தன்தம்பி இலக்குமணனை நோக்கி, ''வலிமை யானவனே! நாம் கூறிய கார்கால எல்லையாகிய நான்கு மாதங்கள் கழிந்தும் வாராது, அதற்கு மேலும் காலம் தாழ்த்திக்கொண்டிருக்கிறானே இந்த மன்னனான சுக்கிரீவன்? இவன் என்ன செய்கிறான்'' என்று கேட்டான்.

தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றாததாலும், காலம் தாழ்த்தியதாலும், செய்ந்நன்றி மறந்ததாலும், சுக்கிரீவன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்றான் இராமன் என்பதாம்.

2. 'பெறல் அரும் திருப்பெற்று, உதவிப் பெருந்
திறன் நினைந்திலன்; சீர்மையின் தீர்ந்தனன்;
அறம் மறந்தனன்; அன்புகிடக்க; நம்
மறன் அறிந்திலன்; வாழ்வின் மயங்கினான்.

அரும்பதங்கள்

*__திரு__ - அரசச் செல்வம்; **திறன்** - நன்றி / தகுதி; **சீர்மை** - ஒழுக்கம் / மேன்மை; **அறம்** - செய்ந்நன்றி; **மறன்** - மறம் / வீரம்; **மயங்குதல்** - அமிழ்ந்து கிடத்தல்; **தீர்தல்** - விட்டு நீங்குதல்.)*

பொழிப்புரை

''யாவராலும் எளிதில் பெறுவதற்கு அரிய அரசச் செல்வத்தையும், இழந்த மனைவியையும், நம் உதவியால் பெற்ற பெரிய தகுதியை நினைவிற் கொள்ளாது மறந்து விட்டான் போலும்'' அவன் தனது நல்லொழுக்கமான மேன்மையிலிருந்து நீங்கிவிட்டான்; அவன் நன்றியறிதல் என்ற தருமத்தை முற்றும் மறந்து போயினான்; அவன் நம்முன் செய்து கொண்ட நட்பு ஒரு புறம் இருக்கட்டும்; நமது வீரத்தையும், போராற்றலையும் அறியவில்லையே? புதிதாகத் திரும்பக் கிடைத்த மனைவியுடனும், அரசுடனும் இனிதாக சுகபோகத்தில் திளைக்கிறான் போலும்!''.

இராமன் இலக்குமணனைக் கிட்கிந்தைக்குச் சென்று வரப் பணித்தல்.

3. ''நன்றிகொன்று, அரு நட்போடு நார் அறுத்து
ஒன்றும் மெய்மை சிதைத்து, உரை பொய்த்துளார்
கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்;
சென்று மற்றுஅவன் சிந்தையைத் தேர்குவாய்.''

அருஞ்சொற்கள்

*(**கொல்லுதல்** - சிதைத்தல்; **நார்** - அன்பு / பிணிப்பு / பாசம் / கயிறு; **ஒன்றுதல்** - பொருந்துதல்; **மெய்மை** - வாய்மை; **சிந்தை** - மனக்கருத்து; **தேர்தல்** - ஆராய்ந்து தெரிந்துகொள்ளுதல்.)*

பொழிப்புரை

''நாம் செய்த உதவியை மறந்தான், நாம் நீட்டிய பெறுதற்கரிய நட்புக்கரத்தையும் அறுத்து விட்டு எல்லோருக்கும் பொருந்துவதான வாய்மையையும் குலைத்து விட்டான். தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றாதும் தவிர்த்து விட்டான். எனவே இவ்வளவு குற்றங்களைச் செய்தவனைக் கொன்று தீர்த்தல் கூடக் குற்றத்தின் பாற்படாது. அதைச் செய்வதன் முன், நீ சென்று அவனது உள்ளக்கருத்தினை அறிந்து வருவாயாக!'' என்றான் இராமன்.

4. வானரங்கள் வெருவி, மலைஒரீஇ
கான் ஒருங்குபடர, அக்கார்வரை,
மீன் நெருங்கிய வானகம் மீன்எலாம்
போனபின், பொலிவற்றது போன்றதே.

அருஞ்சொற்கள்

*(**வெருவி** - அஞ்சி / பயந்து; **ஒரீஇ** - நீங்கி; **படர்தல்** - சேர்தல்; **கார்** - மேகம்; **மீன்** - நட்சத்திரங்கள்; **பொலிவு** - அழகு)*

பொழிப்புரை

இவ்வாறு குரங்குகள் இலக்குமணனின் வருகை கண்டு அஞ்சி, கிட்கிந்தை மலையைவிட்டு நீங்கி, எல்லாம் ஒன்று சேர்ந்து காட்டுக்குள் சென்று ஒளிந்து கொண்டதால் அந்தக் கரியமேகம் போன்ற கிட்கிந்தை மலை, நட்சத்திரங்கள் நெருங்கியிருந்த ஆகாயம், அந்த நட்சத்திரங்கள் எல்லாம் மறைந்துபோன பின், எப்படி அழகு அற்று விளங்குமோ, அவ்வாறு பொலிவற்று விளங்கியது.

5. இலக்குமணன் நகரத்தினுள் நுழைதல்

அன்ன காலையின், ஆண்தகை ஆளியும்,
பொன்னின் நல்நகர் வீதியில் புக்கனன்;
சொன்ன தாரையைச் சுற்றினர் நின்றவர்
''என்ன செய்வது? எய்தினன்' என்றனர்.

அருஞ்சொற்கள்

*(**ஆண்தகை** - ஆடவரிற் சிறந்தோன்; **ஆளி** - சிங்கம்; **சொன்ன** - இடித்துரைத்த; **பொன்** - அழகு)*

பொழிப்புரை

அப்பொழுது, ஆண்களில் சிறந்தவனும் சிங்கம் போல்பவனுமாகிய இலக்குமணன் அழகும் சிறப்பும் மிக்க கிட்கிந்தை நகரத்தின் வீதியில் நுழையலானான். முன்பு கடிந்துரைத்துக் கொண்டிருந்த தாரையைச் சுற்றி நின்ற வானரர்கள் இது கண்டு ''இப்பொழுது இலக்குமணன் நகருக்குள் வந்துவிட்டானே. இனி நாம் என்ன செய்வது?'' என்று தாரையிடம் ஆலோசனை கேட்டனர்.

6. அப்பொழுது அனுமான் ஓராலோசனை கூறுதல்

''அனை! எதிர்ந்து இவண் ஆய்வளையாரோடும்
மனையின் வாயில் வழியினை மாற்றினால்,
நினையும் வீரன் அந் நீள் நெறி நோக்கலான்;
வினையம் ஈது'' என்று, அனுமன் விளம்பினான்.

அருஞ்சொற்கள்

*(**அனை** - அன்னை; **ஆய்** - ஆராய்ந்த; **எதிர்ந்து** - எதிரில் சென்று; **மாற்றுதல்** - தடைசெய்தல்; **நினையும்** - சிந்திக்கும் ஆற்றல்; **வினையம்**-உபாயம் / தந்திரம்.)*

பொழிப்புரை

அப்போது, அனுமன் தாரையை நோக்கி ''அன்னையே! தாங்கள், ஆராய்ந்து தெரிந்து எடுக்கப்பட்ட வளையல்களை அணிந்த சில பெண்களுடன், அவன் வரும் வழியில் எதிரில் சென்று அரண்மனையின் வாயிலில் அவனைத் தடுத்துவிட்டால், சிந்தித்து முடிவெடுக்கும் இலக்குமணன் பெண்கள் நிற்கின்ற நீண்டவழியில் செல்லுவதை எண்ணமாட்டான். இப்போது நாம் செய்யக்கூடிய தந்திரம் இதுவேயாகும்''. என்றான்.

7. தாரை அவ்வாறே செய்தல்

''நீரெலாம் அயல் நீங்குமின்; நேர்ந்து, யான்
வீரன் உள்ளம் வினவுவல்'' என்றலும்,
பேர நின்றனர் யாவரும்; பேர்கலாத்
தாரை சென்றனள் தாழ்குழலாரொடும்.

அருஞ்சொற்கள்

*(**அயல்** - அப்பால்; **நீங்குதல்** - அகலுதல்; **நேர்தல்** - எதிரில் செல்லுதல்; **உள்ளம்** - மனக்கருத்து; **பேர** - விலகி/அகன்று/ ஒதுங்கி; **பேர்கலாத** - பின்னிடாத)*

பொழிப்புரை

தாரை, அங்கதன் முதலிய வானர வீரர்களை நோக்கி, ''சரி நீங்களெல்லாம் சற்று அப்பால் அகன்று செல்லுங்கள்; நான் இலக்குமணனிடம் சென்று, அவனது உள்ளக் கருத்தைக்கேட்டு அறிவேன்'' என்றாள்; உடனே எல்லோரும் சற்று ஒதுங்கி நின்றனர்; தனது உறுதியான கொள்கையிலிருந்து பின்வாங்காத பெருமையை உடைய தாரை, நீண்டு தாழ்ந்து தொங்குகின்ற கூந்தலை உடைய தன் தோழிப்பெண்களுடன், இலக்குமணனை நோக்கிச் சென்றாள்.

8. தாரை இலக்குமணனைத் தடுப்பதுபோல் நிற்றல்.

உரைசெய் வானரவீரர் உவந்து உறை
அரசர்வீதி கடந்து, அகன்கோயிலைப்
புரசையானை அன்னான் புகலோடும், அவ்
விரைசெய் வார்குழல் தாரை, விலக்கினாள்.

அருஞ்சொற்கள்

*(**புரசை** - கழுத்திலிடும் கயிறு; **உரை** - புகழ்; **அகன்** - இடம் அகன்ற; **கோயில்** - அரண்மனை; **விரை** - நறுமணம்; **வார்** - நீண்ட; **குழல்** - கூந்தல்; **விலக்குதல்** - குறுக்கிடுதல்/ தடைசெய்தல்/ வழிமறித்தல்)*

பொழிப்புரை

கழுத்திலிடும் கயிறுடைய யானையைப் போன்ற இலக்குமணன், எல்லோராலும் புகழ்ந்து சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற படைத் தலைவர்களான வானர வீரர்கள் மகிழ்ச்சியுடன் தங்கியிருக்கும் இராச வீதியினைக் கடந்து சென்று, சுக்கிரீவன் வாழும் இடமகன்ற அரண்மனையுள் புகுகின்ற சமயத்தில், இயற்கையிலேயே நறுமணம் கமழும் நீண்ட கூந்தலையுடைய தாரை குறுகிட்டு, இலக்குமணனை வழிமறித்தாள்.

9. விலங்கி மெல்லியல், வெள் நகை, வெள்வளை,
இலங்கு நுண்ணிடை, ஏந்து இள மென் முலை,
குலம்கொள் தோகை மகளிர் குழாத்தினால்,
வலம்கொள் வீரன் வருவழி மாற்றினாள்.

அருஞ்சொற்கள்

*(**விலங்கு** - குறுக்கிட்டு; **நகை** - பற்கள்; **ஏந்து** - உயர்ந்த; **குலம்** - நல்லினம்/ நற்குடிப்பிறப்பு; **வலம்** - வெற்றி; **மாற்றுதல்** - தடுத்தல்)*

பொழிப்புரை

அவ்வாறு குறுக்கிட்டு, மென்மையான தன்மையையும், வெள்ளிய பற்களையும், சங்குகளால் ஆகிய வெண்மையான வளையல்களையும், மின்னல் போல் ஒளிர்கின்ற நுட்பமான இடையையும், உயர்ச்சியும், இளமையும் கொண்ட மெல்லிய கொங்கைகளையும், நற்குடியில் பிறந்த மயில்போலும் சாயலையும் உடைய, வானரமகளிரின் கூட்டத்தினால், வெற்றியும் மேன்மையும் பொருந்திய இலக்குமணன் வருகின்ற அந்த வீதியின் நீண்ட வழியைத் தாரை தடுத்தாள்.

10. **வானர மகளிர் குழுவின் தோற்றம்**

வில்லும் வாளும் அணிதொறும் மின்னிட
மெல் அரிக்குரல் மேகலை ஆர்த்து எழ,
பல்வகைப் புருவக்கொடி பம்பிட
வல்லிஆயம் வலத்தினில் வந்ததே.

அருஞ்சொற்கள்

*(**மின்னிட** - ஒளிவிட்டுப்பிரகாசிக்க; **எழ** - ஒலிக்க; **பம்புதல்** - செறிந்து தோன்றுதல்/ நிரம்பிநிற்றல்; **பலம்** - வெற்றி; **ஆயம்**- சேனை/ திரள்; **அரிக்குரல்** - பறைமுழக்கம்; **வல்லி** - கொடி / மகளிர்; **அரி** - பரற் கற்களுமாம்)*

பொழிப்புரை

அம்மகளிர் அணிந்திருகின்ற ஆபரணங்கள், விற்படை போலவும், வாட்படை போலவும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கவும், அவர்கள் காலில் அணிந்துள்ள சிலம்புகளின் உள்ளிருக்கும் பரல்கற்கள் ஒலிசெய்யவும், அவர்கள் இடையில் அணிந்திருக்கும் மேகலை முரசம்போல் ஒலிஎழுப்பவும், பலவகைப்பட்ட கொடிகள் போல அவர்கள் புருவங்கள் விளங்கவும், மகளிரின் சேனைபோன்ற திரள் வந்து, இலக்குமணனைச் சுற்றிவளைத்துச் சூழ்ந்து கொண்டது.

11. **இலக்குமணன் அவர்களைப் பார்க்க அஞ்சுதல்**

ஆர்க்கும் நூபுரங்கள் பேரி, அல்குலாம் தடந்தேர் சுற்ற,
வேற்கண் விற்புருவம் போர்ப்ப, மடந்தையர் மிடைந்த போது
பேர்க்க அரும சீற்றம்பேர, முகம்பெயர்த்து ஒதுங்கிற்றல்லால்
பார்க்கவும் அஞ்சினான், அப்பருவரை அனைய தோளான்.

அருஞ்சொற்கள்

*(***பரு** *- பருத்த;* **வரை** *-மலை;* **நூபுரம்** *- கால்சிலம்பு;* **சுற்ற** *- சூழ;* **போர்ப்ப** *- மறைக்க;* **மிடைதல்** *- நெருங்கிவருதல்;* **போர்த்தல்** *- மாற்றுதல்;* **போர்தல்** *- நீங்குதல்;* **பெயர்த்தல்** *- திருப்பிக்கொள்ளுதல்;* **பேரி** *- பேரிகை/ முரசம்/ பறை;* **ஆர்த்தல்** *- ஒலித்தல்)*

பொழிப்புரை

அவ்வாறு அவ்வானர மகளிர் கூட்டம், தங்கள் கால்களில் அணிந்திருக்கும் சிலம்பின் ஒலி பேரிகைபோல் ஒலிக்கவும், அவர்கள் அங்குல் பெரிய தேர்களைப் போல் சூழ்ந்து கொள்ளவும் வேற்படையாகிய கண்களும், விற்படையாகிய புருவங்களும் அவனை வந்து மறைத்துக் கொள்ளவும், தன்னை நெருங்கி வந்த போது, நீக்க முடியாத பெருங்கோபம் கொண்டு வந்த, பருத்த மலை போன்ற தோள்களையுடையவனான இலக்குமணன், இப்பொழுது அக்கோபம் சற்றுத் தணியப் பெற்று, தன்முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டு, தன் பின்னால் நிற்கும் அம்மகளிரை ஏறெடுத்துப் பார்ப்பதற்குக்கூட அச்சமுற்று, உள்ளம் கூசி, ஒதுங்கி நின்றான்.

12. **தாரை கூறத் தொடங்குதல்**

தாமரை வதனம் சாய்த்து,
        தனு நெடுந் தரையின் ஊன்றி
மாமியர் குழுவில் வந்தானாம்
        என, மைந்தன் நிற்ப
பூமியில் அணங்கு அனார்தம்
        பொது விடைப்புகுந்து, பொன்தோள்
தூ மன நெடுங்கண் தாரை,
        நடுங்குவாள், இனைய சொன்னாள்.

அருஞ்சொற்கள்

*(***வதனம்** *- முகம்;* **பொன்** *- அழகிய;* **அணங்கு** *- தெய்வப்பெண்;* **பொதுவிடை** *- நடுவில்;* **மைந்தன்***- இளையோன்;* **தனு** *- வில்;* **சாய்த்தல்** *- வளைத்தல் / குனிதல்)*

பொழிப்புரை

இளையோனாகிய இலக்குமணன், தனது தாமரை போன்ற முகம் சற்றுத்தாழ, தலைகுனிந்து, தன்னுடைய பெரிய வில்லைத் தரையில் ஊன்ற வைத்து, மாமியர்கள் சூழ்ந்துள்ள கூட்டத்தில் வந்த புது மருமகனைப் போல் கூச்சமுற்று நின்றான். அப்பொழுது, அழகிய தோள்களை உடையவளும், தூய்மையான மாசற்ற உள்ளத்தையுடையவளும், நீண்ட கண்களையுடையவளுமான தாரை, மண்ணுலகில் வந்து தோன்றிய தேவமகளிர் போன்ற வானரப்பெண்கள் கூட்டத்தின் இடையில் புகுந்து நின்று கொண்டு, சற்று நடுக்கத்துடன், கீழ்க்கண்டவற்றைக் கூறத் தொடங்கினாள்.

13. **தாரை இலக்குமணனைப் புகழ்ந்து பேசுதல்**

''அந்தம்இல் காலம் நோற்ற
ஆற்றல் உண்டாயின் அன்றி,
இந்திரன் முதலினோர்க்கும்
எய்தலாம் இயல்பிற்றாமோ?
மைந்த! நின்பாதம்கொண்டு,
எம் மனை வரப்பெற்று வாழ்ந்தேம்;
உயந்தனம்; வினையும் தீர்ந்தேம்;
உறுதி வேறு இதனின் உண்டோ?''

அருஞ்சொற்கள்

*(**மைந்து** - வலிமை; **மைந்தன்** - வலிமைமிக்கவீரன்; **நோற்றல்** - தவம்செய்தல்; **எய்தல்** -வருகை; **உறுதி** - நன்மை; **அந்தம்** -முடிவு)*

பொழிப்புரை

''வீரனே! அளவற்றகாலம் தவம்புரிந்தாலன்றி நீ உன் திருவடி நோக, எங்கள் மனைக்கு எழுந்தருளியிருப்பது சாத்தியமாகுமோ? நாங்கள் செய்த தவத்தின் பயனால் நீ வரப்பெற்றதால் இப்பிறப்பில் நல்வாழ்வும், மறுமையில் நற்கதியும் பெற்று, எங்கள் தீவினைகளெல்லாம் நீங்கப்பெற்றோம். இதனைக் காட்டிலும் எங்களுக்கு வேறு நன்மை கிடைக்கற்பாலதோ?'' என்றாள் தாரை.

14. ''வெய்தின் நீ வருதல் நோக்கி வெருவி நின் சேனைவீரர்
செய்திதான் உணர்கிலாது, ''திருஉளம் தெரித்தி'' என்றார்;
ஐய! நீ ஆழி வேந்தன் அடியிணை பிரிகிலாதாய்,
எய்தியது என்னை?'' என்றாள், இசையினும் இனிய சொல்லாள்.

அருஞ்சொற்கள்

*(**வெய்து** -வெம்மை/கோபம்; **வெருவி** -அஞ்சி; **தெரித்தல்** - அறிந்து கூறுதல்; **செய்தி** -செயல்/ காரணம்)*

பொழிப்புரை

''வீரனே! நீ மிக்க சீற்றம் கொண்டு வருவதைக் கண்டு, உன்னுடைய வானர வீரர்கள் அச்சம் கொண்டுள்ளனர்; நீ எதற்காக வந்திருக்கிறாய் என்பதை அவர்களால் அறிந்துகொள்ளமுடியவில்லை. அவர்கள் என்னை அணுகி, ''இலக்குமணனது உள்ளக் கருத்தை அறிந்து எங்களுக்குத் தெரிவியுங்கள்'' என்று கூறினார்கள். எனவே! மைந்தனே! நீ எப்பொழுதும் ஆணைச் சக்கரத்தை உடைய இராமபிரானின் திருவடிகளை விட்டு இமைப்பொழுதும் பிரியாத இயல்புடையவனாயிற்றே? இப்பொழுது அவனைப் பிரிந்து, நீ மட்டும் தனியாக இங்கு வந்திருப்பதன் காரணம் என்ன? என்று கேட்டாள், இசைப்பாட்டைவிட இனிமையான சொற்களைப் பேசும் தாரை.

15. **இலக்குமணன் தாரையை நோக்குதல்**

''ஆர்கொலோ உரைசெய்தார்?''
        என்று அருள்வர, சீற்றம் அஃகக
பார்குலாம் முழு வெண் திங்கள்,
        பகல்வந்த படிவம் போலும்,
ஏர்குலாம் முகத்தினாளை,
        இறைமுகம் எடுத்து நோக்கி,
தார்குலாம் அலங்கல் மார்பன்,
        தாயரை நினைந்து நைந்தான்.

அருஞ்சொற்கள்

(**அலங்கல்**- *அசைத்தல்/ ஒளிவிடுதல்;* **அஃகல்** - *குறைதல்/ தணிதல் / அகலுதல்;* **பார்**- *பூமி;* **ஏர்** - *அழகு;* **குலாம்** - *விளங்கும் /திகழும்/குலவும்;* **இறை** *-சிறிது;* **எடுத்து** - *உயர்த்தி/நிமிர்த்தி;* **நைதல்**- *வருந்துதல்;* **வர –** *தோன்ற/ வெளிப்பட)*

பொழிப்புரை

மலர்மாலைகள் அசைந்தாடி ஒளிவீசும் மார்பினை உடையவனான இலக்குமணன், ''இத்தகைய இனிய சொற்களைச் சொன்னவர் யார்?'' என்று பார்க்க வேண்டித் தன் முகத்தைச் சிறிது உயர்த்திப் பார்த்தான். அந்த அளவில் அவன் கோபம் தணிந்தது; அருள் வெளிப்பட்டது. காரணம் அங்கே நின்றது, ஒரு களங்கமும் அற்ற முழு வெண்மதி, நிலத்தில், அதுவும் பகலில் தோன்றினால் எப்படி ஒளி குறைந்து தோன்றுமோ, அதுபோல ஒளி மழுங்கிய முகத்துடன் வாலியின் மனைவியான தாரை, விதவைக் கோலத்தில் தோன்றினாள். அதைக் கண்டதும், இலக்குமணன் தன் தாயாராகிய சுமித்திரை, கோசலை முதலியோரும் இவ்வாறு தானே கைம்மைக் கோலத்தில் இருப்பார்கள் என்று எண்ணித் தன் மனம் மிகவும் வருந்தினான்.

16. **தாரையை நோக்கிய இலக்குமணன் நிலை.**

மங்கல அணியை நீக்கி, மணிஅணிதுறந்து, வாசக்
கொங்குஅலர்கோதை மாற்றி, குங்குமம் சாந்தம் கொட்டாப்
பொங்கு வெம்முலைகள், பூசக்கமுழுத்தொடு மறையப் போர்த்த,
நங்கையைக் கண்ட வள்ளல், நயனங்கள் பனிப்ப நின்றான்.

அருஞ்சொற்கள்

(**மங்கள அணி** - *தாலி / மங்கல நாண் / திருமாங்கல்யம்;* **கொங்கு** - *தேன் கோதை / மாலை;* **சாந்தம்** - *சந்தனக்குழம்பு;* **கொட்டா** - *பூசப்படாத;* **பொங்கு** - *பருத்த;* **பூசம்** - *கமுகுமரம்;* **நயனங்கள்** - *கண்கள்;* **பணிப்ப** - *சிந்த / சொரிய.)*

பொழிப்பு

தன்னுடைய மங்கல நாணையும் நீக்கிவிட்டு, இரத்தினங்கள் பதித்துச் செய்யப்பெற்ற மற்ற அணிகலன்களையும் தவிர்த்து, நறுமணம் பொருந்தியதும், தேன் பெருகுவதுமான மலர்மாலைகளையும் அணியாது விடுத்து, குங்குமம், சந்தனம் ஆகிய கலவைகளைத் தன்மார்பில் பூசிக்கொள்ளாது, பருத்த, வெம்மையுடைய கொங்கைகளைத் தன் பாக்குமரம் போன்ற கழுத்தோடு சேர்த்துத் தன் மேலாடையால் மூடிக்கொண்டு தன் எதிரில் வந்து நின்ற தாரையை, கருணை மிகுந்தவனான இலக்குமணன் கண்டதும், தாரையின் நிலையை எண்ணியும், தன் தாயாரின் நிலையை எண்ணியும் தன் கண்கள் கண்ணீர் சிந்தக் கலங்கி நின்றான்.

பொருளுணர் திறன் செயற்பாடு

1. இராமன் இலக்குமணனிடம் சுக்கிரீவன் குறித்து ஆவேசப்பட்டு முறையிடு பவற்றை எழுதுக.

2. இலக்குமணனைத் தடுத்து நிறுத்த அனுமன் தாரையிடம் கூறிய உபாயம் என்ன?

3. தாரை மகளிர் குழாம் சூழ வந்து இலக்குமணனை வழிமறிக்கும் காட்சியை விபரிக்குமாற்றிலுள்ள சிறப்புக்களை விளக்குக.

4. பின்வரும் அடிகளின் சிறப்புக்களை விளக்குக.
   (அ) 'தாமரை வதனம் சாய்ந்து, தனு நெடுந் தரையில் ஊன்றி'
   (ஆ) 'தார் குலாம் அலங்கல் மார்பன்'

5. பின்வரும் கூற்றுகள் இடம்பெறும் சந்தர்ப்பங்களை விளக்குக.
   அ. உரை பொய்த்துளார்க் கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்
   ஆ. ''மைந்த நின்பாதம் கொண்டு, எம்மனை வரப்பெற்று வாழ்ந்தேம்''
   இ. ஐய நீ ஆழி வேந்தன் அடி இணை பிரிகலாதாய் எய்தியது என்னை? என்றாள்.

குழுமச் செயற்பாடு

இப்பகுதியை நாடகப் பிரதியாக்கம் செய்து நடித்துக் காட்டுவோம்.

திறன் வளர் செயற்பாடு

தாரை, இலக்குமணன் ஆகியோரின் செயற்பாடுகள் தொடர்பான விமர்ச னங்களை எழுத்து வடிவத்தில் அல்லது பேச்சு வடிவத்தில் முன் வைப்போம்.

7 விவேக சிந்தாமணி

இந்நூல் எந்தக் காலத்திற்கு உரியது, யாரால் பாடப்பட்டது என்பது தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை. நாயக்கர் காலத்திற்குரிய சிற்றிலக்கியம் என்றும் கூறுவர். நீதிக்கருத்துக்கள், சிருங்காரச் சுவை நிரம்பிய பாடல்களை உள்ளடக்கிய இவ்விலக்கியம், தனிப்பாடல்களின் தொகுப்பு என்ற கருத்தும் நிலவுகின்றது.

இப்பாடல்கள் பெண்ணின் அழகை நாகரிகமான முறையில் விபரிக்கின்றன. கவிஞனின் சொல்லாட்சியும் கற்பனையும் இரசித்து இன்புறத்தக்கன

வந்தது வான்உறு மதியமோ!

அ. தேன்நுகர் வண்டு மதுதனை உண்டு
தியங்கியே கிடந்ததைக் கண்டு
தான்அதைச் சம்பு வின்கனி என்று
தடங்கையில் எடுத்துமுன் பார்த்தாள்;
வான்உறு மதியம் வந்ததுஎன்று எண்ணி
மலர்க்கரம் குவியுமென்று அஞ்சிப்
போனது வண்டோ பறந்ததோ பழந்தான்
புதுமையோ இது எனப் புகன்றாள்.

பொருள்

தேனை உண்ணும் இயல்புடைய வண்டுகள் மலர்களில் உள்ள தேனையுண்டு மயங்கிக் கிடந்தன. அவற்றைக் கண்டாள் ஒரு மங்கை. அவற்றை நாவல் பழங்கள் என நினைத்து அவற்றுள் ஒன்றைத் தன் பெரிய கையில் எடுத்துப் பார்த்தாள். அப்போது அந்த வண்டு அவளது முக அழகால் வானத்தில் உலாவும் சந்திரன் வந்தது என எண்ணி, (அவளது) கையான தாமரை மலர் குவிந்துவிடும் என அஞ்சிப் பறந்து போய்விட்டது. பின்னர் அவள் பறந்து போனது வண்டோ, அன்றிப் பழமோ வேறு என்ன புதுமையோ எனச் சொன்னாள்.

அரும்பதங்கள்

நுகர் (தல்)	-	உண்(ணு)
மது	-	கள் / தேன்
தியங்கி	-	மயங்கி
தடங்கை	-	அகன்ற கை
வான்	-	வானம்
மதியம்	-	நிலவு
புகன்றாள்	-	சொன்னாள்

பொருளுணர் திறன் செயற்பாடு

1. கவிஞனின் கற்பனையாற்றலை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

2. இச் செய்யுளில் இடம்பெறும் உருவக அணியைக் குறிப்பிட்டு அதன் சிறப்பினை விளக்குக.

கண்டது கெண்டையோ!

ஆ. தண்டு உலாவிய தாமரைப் பொய்கையில்
மொண்டு நீரை முகத்தருகு ஏந்தினாள்;
‘கெண்டை’ ‘கெண்டை’ யெ னக்கரை ஏறினாள்;
கெண்டை காண்கிலள் நின்று தயங்கினாள்.

பொருள்

ஒருத்தி கொடிகளை யுடைய தாமரைப் பொய்கையில் உள்ள தண்ணீரைக் கையால் முகந்து தன் முகத்தருகே ஏந்திப் பார்த்தாள். அதில் தெரிந்த தன் நிழலைப் பார்த்து ‘கெண்டை மீன், கெண்டை மீன்!’ எனக் கூவிக் கொண்டே (நீரைக் கீழே விட்டுத்) தரையில் ஏறிப் பார்த்தபோது அக்கெண்டை மீனைக் காணாமல் நின்று மயங்கினாள்.

அரும்பதங்கள்

பொய்கை - *நீர்த்தடாகம்*
மொண்டு - *அள்ளி*
கெண்டை - *ஒரு வகை மீன்*

பொருளுணர் திறன் செயற்பாடு

1. *நீரில் தலைவி கண்ட காட்சி யாது?*
2. *கண்களின் அழகினை கவிஞர் விபரிக்குமாற்றிலுள்ள நயத்தினை விளக்குக.*

கலகமே செய்யும் கண் இதுவாம்

இ. அலகு வாள்விழி ஆயிழை நன்னுதல்
திலகம் கண்டுஎதிர் செஞ்சிலை மாரனும்
கலக மேசெயும் கண்இது வாம்என
மலரம்பு ஐந்தையும் வைத்து வணங்கினான்.



பொருள்

வாள் போன்ற கண்களையுடைய எம் கன்னியின் நல்ல நெற்றியில் உள்ள பொட்டினது அழகைக் கரும்பு வில்லையுடைய மன்மதன் பார்த்தான். இவளுடைய கண் கலகம் விளைவிப்பதோ என்று எண்ணித் தன் கையில் உள்ள மலர் அம்புகள் ஐந்தையும் அவள் முன்னர் வைத்து வணங்கினான்.

பொருளுணர் திறன் செயற்பாடு

1. இப்பாடலில் இடம்பெறும் உவமை அணியின் சிறப்பினை விளக்குக.
2. மலர் அம்பு ஐந்தையும் வைத்து வணங்கினான் என்ற அடிகளின் பொருத்தப்பாட்டினை விளக்குக.

குழுமச் செயற்பாடு

''தேனுகர் வண்டு'' என்ற பாடலை அடிப்படையாகக் கொண்டு (50 சொற்களுக்குக் குறையாமல்) நயவுரை எழுதுவோம்.

திறன் வளர் செயற்பாடு

பெண்களின் அழகை இலக்கியச்சுவையோடும், நாகரிகமாகவும் விபரிக்கும் பாடல்களைத் திரட்டி எழுதி அவற்றின் சிறப்புக்கள் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுவோம்.

8 உரிமையும் கடமையும்

டாக்டர் மு. வரதராசன் (1912 - 1974)

தமிழகத்தின் திருப்பத்தூரில் பிறந்தவர். தமிழகத்தில் முதன்முதலாக கலாநிதிப்பட்டம் பெற்ற தமிழர் என்ற பெருமையும் இவரைச் சாரும். அத்துடன் அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் டி.லிட் சிறப்புப்பட்டம் பெற்ற முதல் தமிழறிஞராகவும் விளங்குகின்றார். ஆசிரியர், விரிவுரையாளர், துணை வேந்தர் முதலான பணிகளையாற்றிய இவர் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி முதலிய மொழிகளில் புலமை உடையவராகவும் விளங்குகின்றார். நாவல், சிறுகதை, நாடகம், வாழ்க்கை வரலாறு முதலிய துறைகளுடன் தொடர்பான 85 நூல்களை எழுதியுள்ளார்.

மனிதகுல வரலாற்றில் மனிதன் பல்வேறு சவால்களையும், தோல்விகளையும் சந்தித்து வருகின்றான். மனிதனை நிர்மாணிக்க முனைந்த முடியரசுகளும், குடியரசு களும், சகலருக்கும் பொருந்தக்கூடிய சமத்துவத்தையும், விடுதலையையும் வழங்கிவிட வில்லை. இதிலிருந்து மீளுவதற்கான தனிமனிதனது பங்களிப்புக்களை இக்கட்டுரை தூண்டுகிறது.

நாம் இந்தப் பெரிய உலகத்தில் ஒரு சிறிய மூலையில், ஒரு சூழ்நிலையில், ஒரு குடும்பத்தில், வாழ்கின்றோம்; அவ்வாறு வாழ்வதற்கு உரிமை வேண்டும்; உரிமை இல்லாத வாழ்வு உயிரற்ற வாழ்வு. ஆனால், மனம் போனபடி வாழ முழு உரிமை எவருக்கும் கிடைக்காது; என்றும் கிடைக்காது; ஓரளவுதான் உரிமை கிடைக்கும்; ஓரளவு கட்டுப்பாடு இருக்கத்தான் வேண்டும்.

அந்த அளவு உரிமை பெற்று வாழ வேண்டுமானால், அதற்காக நாம் உலகிற்குச் செலுத்தவேண்டிய வரி ஒன்று உண்டு. அதுதான் கடமை என்று கூறப்படுவது. கடமையைச் செய்யத் தவறுகிறவர்களுக்கு உரிமை கிடையாது.

குடும்பத்தில் தந்தை என்று வாழ்கின்ற ஒருவருக்குச் சில உரிமைகள் உண்டு; ஆனால் பொருள் வருவாய்க்கு உழைத்தல், குடும்பத்தைக் காப்பாற்றுதல் போன்ற கடமைகளும் அவருக்கு உண்டு. மகனுக்கும் சில உரிமைகள் உண்டு. தன் பெற்றோருக்குக் கட்டுப்பட்டு ஒழுங்காக நடக்க வேண்டும்; ஆசிரியர்களுக்குக் கட்டுப்பட்டு ஒழுங்காகப் படிக்க வேண்டும்; இவ்வாறு மகனுக்கும் சில கடமைகள் உண்டு. அலுவலகத்தில் அல்லது தொழிற்சாலையில் வேலை செய்வோருக்கு ஊதியம் பெறுதல், விடுமுறை பெறுதல், மருத்துவ வசதி பெறுதல் முதலிய உரிமைகள் உண்டு; அங்கே நேரத்துடன் சென்று குறிப்பிட்ட வேலைகளை ஒழுங்காகச் செய்யும் கடமைகளும் உண்டு.

உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. உரிமையை மட்டும் மிகுதியாக விரும்பிக் கடமையைப் புறக்கணித்தால், குழப்பம்தான் மிஞ்சும்; உள்ள உரிமையும் நிலைக்காது. இன்று உலகத்தில் பல பகுதிகளில் உள்ள சீர்கேடுகளுக்கும் குழப்பங்களுக்கும் இந்தத் தவறுதான் காரணம். பலர் இன்று உரிமையைப் பற்றியே போராடுகின்றார்கள். கடமையில் கருத்துச் செலுத்துவது குறைகின்றது. அலுவலகம், தொழிற்சாலை முதலியவை மட்டும் அல்ல; குடும்பமும் அப்படித்தான். எந்தக் குடும்பத்தில் கணவனும் மனைவியும் உரிமையைப் பற்றி மிகுதியாக நினைத்து, கடமையைப் புறக்கணிக்கின்றார்களோ, அந்தக் குடும்பத்தில் போராட்டம் ஏற்படும்; உரிமைப் போராட்டம் வளர்ந்தால் கணவன் மனைவி பூசல் வளரும்; மக்கள் ஒழுங்காக நடக்க மாட்டார்கள்; காதல், கற்பு முதலியவற்றிற்கு இடம் இருக்காது.

ஆகவே; எல்லோரும் ஒத்த அன்பு செலுத்தித் தன்னலத்தைக் குறைக்க வேண்டும்; அல்லது உரிமை பற்றி எண்ணும் அளவுக்குக் கடமை பற்றியும் உணர்வதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். இல்லையானால், குடும்பப் போராட்டம், நாட்டுக்கலகம், உலகப் போர் முதலியவற்றைத் தவிர்க்க முடியாது.

எண்ணமும் பேச்சும் போதுமா? இவற்றைப் போக்க வழி என்ன என்று எண்ணிப் பார்த்து, ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற சிறு பங்கைச் செய்ய வேண்டும். போக்குவதற்கு வழி உள்ளது; அன்பை வளர்க்க வேண்டும். உரிமையைப் போலவே கடமையையும் போற்ற வேண்டும்; அல்லது, இயலுமானால் உரிமையை விட கடமையைப் பெரிதாகப் போற்றி வாழ வேண்டும்.

உரிமைக்கும் கடமைக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வை நீக்குவதற்காக இயற்கை அமைத்த ஓர் அருமையான பாதுகாப்பே அன்பு எனப்படுவது. அன்பு எங்கே உயர்ந்து விளங்குகின்றதோ, அங்கே உரிமைப் போராட்டம் இல்லை; கடமைக் குறைவு இல்லை. அதனால் ''அன்பின் வழியது உயிர்நிலை'' என்கிறார் திருவள்ளுவர். அன்பு இல்லாத வாழ்க்கை பாலை நிலத்தில் உள்ள பட்டமரம் போன்றது என்றும் கூறுகின்றார். அதனால் குடும்பத்தில் அன்பு ஆட்சி செய்யவேண்டும் என்று முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள். இல்வாழ்க்கையை ஓர் அறம் என்று சிறப்பித்து, இல்லறம் என்றார்கள். மக்கட் பேறு, சுற்றம் தழுவுதல் முதலியவற்றை அதன் அங்கம் ஆக்கினார்கள். தேசபக்தி என்று அமைந்த அன்பு அப்படியே நாடு என்ற பெரிய குடும்பத்தைப் போற்றி வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும். சமயம் அல்லது கடவுள் நெறி என்பதும், உலகத்தில் வாழும் எல்லோரிடமும் அன்பு செலுத்தி, உலகத்தையே கடவுளின் குடும்பம் என்று கருதும் பரந்த நோக்கத்தை வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும்.

ஆனால், குடும்பத்தில் தாய் செலுத்தும் அன்பைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு தந்தையோ மக்களோ தன்னலம் உடையவர்களாய்த் தீமை செய்வார்களானால் என்ன ஆகும்? அப்படித்தான், நாட்டில் ஒரு சாராரின் அன்பைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு மற்றொரு சாரார் தன்னலமாக வாழ்வார்களானால், அன்பு வரண்டு போகும். உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம் ஏற்படும்.

பழங்காலத்தில் சமுதாயத்தில் ஆள்வோரும் ஆளப்படுவோரும் வெவ்வேறாக இருந்தார்கள். இக்காலத்தில், ''எல்லாரும் இந்நாட்டு மன்னர்'' என்ற நிலைமை உள்ளது. ஆளப்பிறந்தவர்கள் என்று யாரும் இல்லை. பழங்காலத்தில் இருந்த நிலமைக்கு ஏற்றபடி உரிமை சிலருக்கும் கடமை பலருக்கும் என்று இருந்தன. இக் காலத்தில் ஒவ்வொருவருக்கும் உரிமையும் உண்டு; கடமையும் உண்டு. எதிர் காலத்தில் வேலைக்காரர் என்று ஒரு சாரார் இருக்க மாட்டார்கள். எல்லோரும் ஒவ்வொரு வேலை செய்து உழைத்துப் பழக வேண்டி ஏற்படும். வேலைகளிலும் உயர்ந்த வேலை தாழ்ந்த வேலை என்பது போய்விடும். வியர்வை வராத வேலைக்கு மதிப்பும் வியர்வை விடும் வேலைக்கு மதிப்புக் குறைவும் உள்ள நிலமை மாறிவிடும். ஆகையால், எந்த உழைப்பிற்கும் பழக்கப்படுத்திக்கொள்வோரே நன்றாக வாழ முடியும்.இப்போதே அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலான நாடுகளில் உடம்பால் உழைப்பவர்கள் நல்ல ஊதியம் பெற்று மூளையால் உழைக்கும் அலுவலர்க்கு நிகராக வாழ்கின்றார்கள். அந்நாடுகளில் வீடுகளில் போலவே அலுவலகங்களிலும் எடுபிடி ஆட்கள் குறைந்து

வருகின்றார்கள். ஆகையால் சிறுசிறு வேலைகளையும் நாமே செய்து பழகுவது நல்லது. காரில் போகும் வசதி உடையவர்கள் காரைத் தூசு துடைக்கவும் கற்றுக்கொள்ள முன்வர வேண்டும். சைக்கிளில் போகின்றவர்களும் அதைத் துடைக்கவும் பழுது பார்க்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். உடம்பால் உழைக்கும் வேலைகள் இழிவானவை என்ற எண்ணம் நம் மனதை விட்டுப் போக வேண்டும்.

முன்னேறிவரும் அரசியல் நோக்கோடு சமுதாய நோக்கோடு பார்த்தாலும் சரி சமயநோக்கோடு பார்த்தாலும் சரி, மனிதருக்கு மனிதர் எந்த வகையான வேறுபாடும் கருதக்கூடாது. ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லை என்றார் பாரதியார். உயர்ந்தவர் என்றும் தாழ்ந்தவர் என்றும் எவரும் இல்லை. மனித சமத்துவம் எல்லா நாட்டு அறிஞர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். சாதி, மதம், நிறம் முதலான எந்தக் காரணம் பற்றியும் வேறுபாடு செய்யாத நிலையை நோக்கி உலகம் நடக்கின்றது. எவ்வளவு பெரிய அமைப்பாக இருந்தாலும் எவ்வளவு பெரிய சமயமாக இருந்தாலும், மனிதரிடயே வேறுபாடுகளை வளர்க்கும் எதுவும் எதிர்காலத்தில் வாழ முடியாது. ஆகவே உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற கருத்தையே மறக்க வேண்டும்; உயர்ந்த தொழில் தாழ்ந்த தொழில் என்ற வேறுபாட்டை ஒழிக்க வேண்டும். அவரவர் பெறும் உரிமைகளுக்கு வரியாக அவரவர்க்கு வாய்க்கும் கடமைகளை மதித்துச் செய்யவேண்டும்.

பொருளுணர் திறன் செயற்பாடு

1. பின்வரும் தொடர்கள் இடம்பெறும் இலக்கியங்களையும், அவ் இலக் கியங்களைப் படைத்தவர்களையும் குறிப்பிடுக.
   அ. அன்பின் வழியது உயிர் நிலை ...
   ஆ. எல்லோரும் இந்நாட்டு மன்னர்
2. ‘‘உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்’’ என்ற தொடரினூடாக ஆசிரியர் வலியுறுத்தும் கருத்துக்களைக் குறிப்பிடுக.
3. கட்டுரை ஆசிரியர் தான் கூறவிழைந்த விடயங்களை வலியுறுத்தக் கையாண்ட உத்திகளைத் தெளிவுபடுத்துக.
4. உரிமை, கடமை, அன்பு இவற்றிற்கிடையிலான தொடர்பினைக் கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

குழுமச் செயற்பாடு

நமது பிரதேசத்தைச் சேர்ந்த படைப்பாளி ஒருவரை நேர்காணல் செய்து அவரது கருத்துக்களையும் தகவல்களையும் கொண்டு நேர்காணல் பிரதியாக்குவோம்.

திறன் வளர் செயற்பாடு

''கடமைகளைச் செய்தால் உரிமைகளைப் பெறலாம்'' என்ற தலைப்பில் சிற்றுரை ஆற்றுவோம்.

9 எலியம்

உமா வரதராஜன்

இவர் கிழக்கிலங்கையின் பாண்டிருப்பில் 1956 பிறந்தார். சிறுகதை இலக்கிய விமர்சனம், திரைப்பட விமர்சனம், பத்தி எழுத்து, கவிதை, நாவல் என்று விரியும் இவரது ஆளுமையின் உச்சமாக வெளிப்படுவது சிறுகதை என்ற வடிவமேயாகும். ஈழத்திலும் தமிழகத்திலும் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிலிருந்தும் வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இவரது படைப்புக்கள் வெளி வருகின்றன. இவரது சிறுகதைகள் ஜேர்மன், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவர் தொலைக்காட்சித் தொகுப்பாளராகவும் பணியாற்றி வருகின்றார். ''உள்மன யாத்திரை'' என்ற இவரது சிறுகதைத் தொகுப்பு வடகிழக்கு மாகாண சபையின் விருது பெற்றுள்ளது.



எலிகள் பற்றிய சித்திரிப்புகள் பல வடிவங்களில் அமைந்திருப்பதனைக் காண முடிகிறது. பொதுவாகச் சுரண்டல் முறையைக் குறிக்க எலிகளைக் குறியீடுகளாகக் கொள்வர். அதே வேளை மிக்கிமவுஸ் என்ற கார்டூன் எலி, நகைச்சுவை உணர்வையும் புத்திசாலித்தனத்தையும் வெளிப்படுத்துகிறது. இக்கதையும் எலி ஒன்றை மையப் படுத்தியே சுழல்கின்றது.

கொஞ்சம் பழைய வீடுதான். ஆனால், அது ஓர் அழகான வீடு. பக்கத்துக் கொன்வென்றில் இருந்து வாத்தியம்மா சொல்லிக் கொடுக்கும் வாசகங்களை அப்படியே ஒப்புவிக்கும் பாலர்களின் ஒருமித்த குரல்கள் அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கும். வைத்தியசாலை வெகு கிட்டத்தில் இருந்தது. சந்தைகூட அவ்வளவு தூரத்தில் இல்லை. இவன் வீட்டுக்கு நேர் எதிரே புகைப்படப்பிடிப்புநிலையம் ஒன்று இருக்கின்றது. தேவையானால் இவன் தன் வீட்டிலிருந்தே ஒப்பனை செய்து கொண்டுப் போய்ப் படம் எடுத்துக் கொள்ளலாம். அவர்களுடைய பௌடரையும், ஒல்லாந்தர் காலத்து அழுக்கு நிரம்பிய சீப்பையும் பாவிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அதற்குப் பக்கத்திலுள்ள பேக்கரியில் பாண் போடுவார்கள். 'கேக்' கும் போடுவார்கள். ஆனால் இரண்டுக்குமிடையில் அதிக வித்தியாசம் இருப்பதாக இதுவரையில் தெரியவில்லை. பாண் வேகும் முறுகலான மணம் அவ்வப்போது வீசிக் கொண்டிருக்கும்.

இவையெல்லாம் அந்த வீட்டுக்குக் குடிவந்த அவனைச் சந்தோசமடையச் செய்தன. ஆனால் அந்த வீட்டில் எலிகள் இருக்கும் என அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

எலிகளை அவனுக்கு எப்போதுமே பிடிக்காது. இவனைப் போலவே எலிகளைப் பிடிக்காத ஒருவன் தான் உயிரியல் பயிற்சி வகுப்புக்கு எலிகளை வெட்டி ஆராயும் முறையைக் கொணர்ந்திருக்க வேண்டும். எலிகளை மாத்திரமல்ல - பல்லி, கரப்பான் பூச்சி, பூரான், நத்தை... எல்லாவற்றுக்கும் மேலாக மிக அவதியுடன் கழிப்பறைக்குள் நுழையும் போது வழிமறித்துக் கொண்டு பேந்தப் பேந்த விழித்தபடி காத்துக் கொண்டிருக்குமே அந்தத் தேரை.. இவற்றையெல்லாம் அவனுக்குக் கண்ணில் காட்டக் கூடாது.

எலி, பிள்ளையாரின் வாகனம் என அம்மா அடிக்கடி சொல்லுவா. அதனால் எலியைத் துன்புறுத்துவது தெய்வ நிந்தனையாம். ஆனால் பள்ளி நாட்களில் எலி வேண்டுமென உயிரியல் வாத்தியார் சொல்லியதைத் தெரிவித்தபோது அம்மா மௌனமே சாதித்தாள். அன்று மாமா என்னமாய்க் கஸ்டப்பட்டு எலியைப் பிடித்துத் தந்தார்.

எதிர்காலத்தில் ஒரு பெரிய வைத்திய கலாநிதியாக ஆஸ்பத்திரி விறாந்தையில் இவன் உலா வருவது போலவும், இவன் பின்னால் இவனுடைய 'ஸ்டெதெஸ்கோப்பை' ஏந்தியபடி தான் வருவது போலவும் மாமா எலியை அமுக்கிப் பிடித்த அந்த தருணத்தில் கனவு கண்டிருக்கக்கூடும்.

எலிகள் என்றதும் அந்தத் திருட்டு முழிகள்தான் முதலில் மனதில் தோன்றுகின்றன. தேங்காய், மாங்காய், அரிசி, பருப்பு... எவற்றை இந்த எலிகள்

விட்டுவைக்கின்றன. நேற்று வாங்கிய புத்தம்புது மணச்சவர்க்காரத்தை இன்று காணவில்லை. எலிக்கு எதற்கு மணச்சவர்க்காரம் என அவனுக்குப் புரியவில்லை. ஒரு வேளை எலிஸாவுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கா விட்டால் முகத்தைத் திருப்பிக் கொள்ளுமோ? (எலியின் மனைவி அல்லது காதலியின் பெயர் எலிஸாவாக இருக்க வேண்டும் என்பது அவனது ஊகம்.)

எலிகளுக்கும் அவனுக்குமிடையே யுத்தப் பிரகடனம் நேற்றிரவு ஏற்பட்டுவிட்டது. லதா மங்கேஸ்காரின் மீரா பஜனையை அவன் நேற்றிரவு கேட்டுக் கொண்டிருந்தான். எம்.எஸ். சுப்புலெச்சுமியின் மீரா பஜனைக்கும், இதற்கும் உள்ள பிரத்தியேக விசேஷங்கள் குறித்து அவன் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்த போது தொப்பென்று ஓர் எலி கட்டிலில் விழுந்தது. அது வழி தடுமாறி அவனுடைய கால் வழியாகக் கடக்க முற்படுகையில், அவன் காலை உதறிக் கட்டிலின் மீதேறித் துள்ளிக் குதித்தான். கட்டில் என்பதைத் தச்சர்கள் படுப்பதை உத்தேசித்தே செய்திருப்பார்கள். அவன் இவ்விதம் துள்ளிக் குதிப்பான் என முன்னரே தெரிந்திருந்தால் இன்னமும் பலமான மரத்தைக் கட்டில் செய்த தச்சன் இவனுக்காகத் தேர்ந்தெடுத்திருக்கக் கூடும். கட்டிலின் குறுக்குப் பலகை சடசடவென்ற ஒலியுடன் முறிய அவனுடைய ஒற்றைக் கால் பள்ளத்தில் இறங்கித் தரையைத் தொட்டது. கைகளை மெல்ல ஊன்றியவாறு வெகு பிரயாசையுடன் அவன் தன் காலை விடுவித்தான். முழங்கால் வலித்தது. தீக்குச்சி அளவில் முழங்காலில் ரத்தக் கீறல் ஒன்று.

இந்தச் சம்பவத்துடன் எலியை அவன் தன் மாபெரும் எதிரியாகப் பிரகடனம் செய்தான். தேரை, தவளை, பாம்பு, பல்லி, ஓணான், பூரான், கரப்பான்.... இவற்றைப் பற்றிக் கூட இந்த அளவுக்கு அவன் கவலைப்பட்டதில்லை. அவற்றால் இந்தளவு அவஸ்தையை அவன் அனுபவித்தது கிடையாது.

அவனது வீட்டின் பின்புறம் ஒரு பாழ் வளவு இருக்கின்றது. குட்டையாகவும், நெட்டையாகவும் பற்றைகள் அங்குண்டு. அந்த வளவுக்குள் வெறுங்காலாய் நடந்தால் உடைந்த போத்தல் ஓடுகளோ, கறள் ஆணிகளோ, முட்களோ காலில் சேதம் விளைவிப்பது நிச்சயம். குப்பை கொட்டும் பிரதேசமாக அயலவர்கள் அதை ஆக்கி வைத்திருந்தனர். அந்த வளவு மூலையில் ஓர் அநாதைக் கார் குப்புறக் கிடந்தது. இந்த நாடு இறக்குமதி செய்த முதல் நூறு கார்களுள் இதுவும் ஒன்றாக இருந்திருக்கும். இந்தக் காரை வாங்கியவனின் பேரனோ அல்லது கொள்ளுப் பேரனோ காலப்போக்கில் இந்தக் காரின் வடிவமைப்பையும் தாத்தாவின் ரசனையையும் சகிக்க முடியாமல் தீ மூட்டிக் கொழுத்தி இப்படிப் போட்டிருக்க வேண்டும்.

தனக்கு அச்சம், அருவருப்பு தரும் அத்தனை ஜீவ ராசிகளும் அந்த பாழ் வளவுக்குள் இருந்துதான் படையெடுத்து வருவதாக அவனுக்குத் தோன்றிற்று. பாழ்வளவுக்கும்,இவன் வீட்டுக்கும் நடுவில் இருக்கும் வேலியில் இரவில் சரசரப்புக்

கேட்கும் போது அது பாம்பா, எலியா, வேறெதுவோ எனப் புரியாமல் குழம்பிக் கொண்டிருந்தான்.

இந்த நிலையில் அவன் ஒரு தீர்மானத்திற்கு வந்தான். அவனுக்கு நல்ல ஞாபகம். பாட்டியுடன் அவன் இருந்த காலத்தில் அவள் ஒரு எலிப்பொறி வைத்திருப்பாள். பாட்டியின் வீட்டு அறையுள் அடுக்கப்பட்டிருக்கும் நெல் மூட்டைகளைத் தேடி வரும் எலிகள் இவனைப் போலவே பாட்டிக்கும் அந்தக் காலத்தில் பெரும் பிரச்சி னையைத் தந்தன. தேங்காய்த் துண்டை நறுக்கி எடுத்து, நெருப்பில் சுடுவாள் பாட்டி, பின்னர் பொறியில் பொருத்தி விட்டு இவனும் பாட்டியும் தூங்கப் போவார்கள். எனினும் எலிகள் ஒரு நாளும் அகப்படவில்லை. பொறியில் தேங்காய்த் துண்டு அப்படியே இருக்கும், ஒவ்வொரு நாளும் மூட்டையிலிருந்து கொட்டப்பட்டு, சிதறிக் கிடக்கும் நெல் மணிகள் குறைந்த பாடாயில்லை.

இப்போது எலிப்பொறியை நம்புவதைத் தவிர இவனுக்கும் வேறு வழி இருக்கவில்லை. கடைக்காரன் நான்கைந்து விதமான எலிப்பொறிகளைத் தூக்கிக் காண்பித்தான். பாட்டியின் வீட்டுப் பொறிக்கும் இந்தப் பொறிக்கும் எவ்வளவு வித்தியாசங்கள். அது வெறும் தகரத்துண்டு; இந்தப்பொறிகளின் வடிவமைப்பே அலாதியானது. இந்தப் பொறிகளைத் தயாரித்த நாட்டின் பெயரைக் கடைக்காரன் தெரிவித்த போது அவனது நம்பிக்கை மேலும் அதிகரித்தது. இந்த உலகுக்கும் அப்பால் பல கிரஹங்களிலும் எவ்வளவு சாதனை புரிந்தவர்கள், புரிகின்றவர்கள் அந்த நாட்டினர். அவர்களுடைய தொழில்நுட்பத்தின் முன்னால் இந்தச் சுண்டெலிகள் எம்மாத்திரம்? அவன் ஒரு பொறியைத் தேர்ந்தெடுத்து வாங்கிக்கொண்டான்.

பாட்டியின் உத்தியை அவன் கையாளவில்லை. தேங்காய்த் துண்டுக்குப் பதிலாக நெத்திலிக் கருவாட்டைச் சூடு காட்டிப் பொறியில் பொருத்தி வைத்தான். எலிகள் அதிக அளவில் புழங்கிய பிரதேசம் எனக்கருதப்பட்ட இடத்தில் பொறி வைக்கப்பட்டது. வாய் திறந்து காத்திருக்கும் முதலை போல அது அப்போது தோன்றியது.

அவன் தூங்கப் போனான். தூக்கம் வரவில்லை. கருவாட்டிற்காக மூஞ்சியை நீட்டி, மரண அடி வாங்கப் போகும் எலியை நினைத்துக் கொண்டதும் குதூகலம் சூழ்ந்து கொண்டது. ஏதோ ஒரு கட்டத்தில் கேட்கப் போகும் எலியின் கீச்சிடலுக்காகக் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டிருந்த அவன் ஒரு கட்டத்தில் தவறி, அப்படியே தூங்கியும் போனான்.

காலையில் எழுந்ததும் முதல் வேலையாக எலிப்பொறியை பார்க்க ஓடிப்போனான். எலிப்பொறியில் இருந்த கருவாட்டுத் துண்டை எறும்புகள் மொய்த்திருந்தன. எலிகள் எல்லாம் சைவத்தைத் தழுவிவிட்டனவா என எண்ணி அவன் எரிச்சலடைந்தான்.

மறுநாளும் பொறியில் சுட்ட கருவாடு இடப்பட்டது. பொறி வைக்கப்படும் இடத்தை மட்டும் அவன் மாற்றிக் கொண்டான். படுப்பதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த போது பொறி மேலெழும்பி விழுந்ததற்கு அடையாளமான ஒரு சத்தமும், எலியின் கீச்சிடலும், பொறி இழுப்பட்டுச் செல்லும் ஓசையும் கேட்டன. அவன் பரப்பரப்புடன் ஓடிப்போய் விளக்கைப் போட்டான். ரத்தச் சொட்டுக்கள் நிலத்தில் கிடந்தன. கழுத்து நெரிபட்ட எலியின் பற்கள் அகோரமாய் வெளியில் தெரிந்தன. சண்டையிடும் நாய்களின் வாய் பிளந்து, மேலுதடு விரிந்து பற்கள் தெரியும் தோற்றம்.

'ஹா ! முதற்பலி'

குரூரமான ஒரு சந்தோஷம், வெற்றிப் பெருமிதம் எல்லாம் அவனை ஆட்கொண்டிருந்தன. வெளியில் வந்து, மண்ணைக் கிண்டி, சின்ன மடுவொன்றைப் போட்டான். எலியைப் பொறியினின்று மெதுவாக எடுத்து அதன் வாலைப் பிடித்தவாறு கொண்டு போய் மடுவில் வீழ்த்தினான். பொறியை நன்றாகக் கழுவித் துடைத்து எண்ணெய் தடவினான். எலிகள் சாமர்த்தியம் மிக்கவை. அவற்றுடைய ரத்தத்தின் வாடைகூட 'ரத்ததின் ரத்தங்களுக்கு' வீசக்கூடாது என்பதில் கவனமாக இருந்தான். மறுபடியும் பொறி கருவாட்டுத்துண்டு வைத்து நாணேற்றப்பட்டது. அவன் மிக மகிழ்ச்சியுடன் தூங்கிய நாளது.

காலையில் எழுந்ததும் ஒரு விரிந்த மலர் போல மறுபடியும் சந்தோஷம் காத்திருந்தது. அடுத்த எலி ! வயிற்றுப்பாகம் அரைவாசி பிளந்தபடி பொறியில் கிடந்தது இந்த எலி. பொறியின் உதவி கொண்டு உலகத்தின் அத்தனை எலிகளையும் ஒழித்துக் கட்டுவேன் என அவன் தனக்குள் ஒருதரம் சொல்லிக் கொண்டான். கர்ணனுக்குக் கிடைத்த நாகாஸ்திரத்தை ஒத்த இந்த எலிப்பொறியைத் தடவிப் பார்ப்பதில் சந்தோஷமடைந்தான்.

அலுவலகம் சென்றதும், கையெழுத்துக் கூடப்போட மறந்து அங்குள்ள நண்பர்களிடம் மிகவும் மகிழ்ச்சியாகச் சொன்னான் '' ஒரே இரவில் ரெண்டு எலிகள் குளோஸ் ! ஹா...ஹா...''

அவர்கள் அவனை ஒருவிதமாக உற்றுப் பார்த்தனர். இவர்களைப் போன்ற விபரமறியாத பேர்வழிகள் ஒரு காலத்தில் ஆர்கிமிடீஸைக் கூட அப்படித்தான் பார்த்திருப்பார்கள், பரவாயில்லை.

நம்பவில்லையல்லவா? .... நம்பமாட்டீர்கள் இரண்டு எலிகள் ஒரே ராத்திரியில் முடித்து விட்டேன் நண்பர்களே.''

நண்பர்கள் அதற்குப் பிறகு ஒன்றும் பேசவில்லை. அவர்களுடன் மேற்கொண்டு இது சம்பந்தமாகப் பேச அவனும் விருப்பம் இல்லாதவனாகவே இருந்தான். ''அப்பாவி உயிர்கள்'' என்று கூறி எலிகளுக்காக அவர்கள் வக்காலத்து வாங்கக் கூடும். அல்லது ஜீவகாருண்ய சங்கத் தலைவர் யாருக்காவது இந்த விசயத்தை இவர்கள் தெரியப்படுத்த முனையலாம். அவரும் தன் கடிதத் தாள் ஒன்றை விரயம் செய்து ''அப்பாவி உயிர்களைக் கொல்லும் உன் மேல் நாங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கலாகாது''. என மிரட்டல் கடிதம் ஒன்றை அனுப்பக்கூடும். எனவே தற்போதைக்கு அவையடக்கம் ரொம்பவும் முக்கியம் என அவனுக்குத் தோன்றியது.

அன்றிரவு மீண்டும் பொறி தயார் நிலையில் வைக்கப்பட்டது. அகழி நிறைய முதலைகளும், கோட்டையின் அரண்கள் தோறும் ஆயுதம் ஏந்திய சிப்பாய்களும் கிடைக்கப்பெற்ற அரசனாகத் தன்னை நினைத்து அவன் படுக்கைக்குப் போனான்.

ஆனால் அன்றிரவு எதிர்பாராத இரு சம்பவங்கள் நடந்தன. ஒன்று பின்னிரவில் கொஞ்சம் மழை பெய்தது. அந்த மழைச் சத்தத்தை கேட்டபடியே அவன் தூங்கிப்போனான். மற்றச் சம்பவம் முக்கியமானது. எலியொன்று தன்னிஷ்டத்துக்கு நேரம் எடுத்து, அவனுடைய நேசத்துக்குரிய சட்டை ஒன்றைக் குதறிவிட்டுப் போயிருந்தது. வரைபடத்தில் இருக்கும் அவுஸ்திரேலியாக் கண்டத்தை ஞாபகப்படுத்தும் ஒரு கிழிசல் சட்டைப் பை இருக்கும் இடத்தில் தோன்றியிருந்தது.

காலையில் சட்டையைக் கையில் எடுத்து அவன் வெகு நேரம் வரை திகைத்துப் போயிருந்தான். அந்தச் சட்டையை இனி அணிய முடியுமென அவனுக்குத் தோன்றவில்லை. கிழிசல் உள்ள சட்டைகளை அணிகின்ற ஒரு நாகரிகம் இந்த நாட்டில் வரும் வரைக்குமாவது அவன் பொறுத்திருக்கத்தான் வேண்டும்.

உலகத்தின் கெட்ட வார்த்தைகளை எல்லாம் சொல்லி அவன் எலிகளைத் திட்டினான். வைத்த இடத்தில் பொறி அப்படியே இருக்க, கருவாடு மட்டும் காணாமற் போன மாயம் ஆச்சரியம் ஊட்டியது. எறும்புகள் அபகரித்தனவா? அல்லது சாமர்த்தியம் மிக்க எலிகளின் ''தோலிருக்கச் சுளை முழுங்கும்'' சாகஸ வேலையா என அவன் யோசித்தான். முதற் தடவையாகப் பொறியின் மீது அவன் நம்பிக்கை இழந்தது அப்போதுதான்.

எலிகளின் தொல்லை குறித்து யாரிடமாவது கூறி ஆலோசனை கேட்க வேண்டுமென இப்போது அவனுக்குத் தோன்றியது. பக்கத்து வீட்டுக்காரரான லோரன்ஸை நாடுவதைத் தவிர அவனுக்கு வேறு வழி இருக்கவில்லை. லோரன்ஸை நாடுவதற்குச் சில காரணங்கள் உண்டு.

லோரன்ஸ் கோழிகளைச் சத்தமில்லாமல் அமுக்குவதில் அதிதிறமைசாலி. இரவில் மரக்கிளைகளில் தங்கிவிடும் கோழிகளை எவ்விதச் சத்தமும் இல்லாமல் கைப்பற்றுவது எப்படி என்பதை ஒரு தடவை அவர் காட்டித் தந்திருக்கின்றார். பொந்துக்குள் உடும்பொன்று ஒரு நாள் போய்ப் புகுந்து கொண்டது. உடும்பின் வாலை மாத்திரம் வெளியில் எடுத்து சுழற்றிய வேகம் அற்புதம். மறுகணம் நிலத்தில் முகம் மோதி அவருடைய கையில் இருந்து விழுந்தது உடும்பு.கூடுமானவரை அவருடைய வேட்டை அனுபவங்களைக் கேட்பதை அவன் தவிர்த்தே வந்திருக்கின்றான். ஏனெனில் முயல் வேட்டை அனுபவத்தைச் சொல்லி முடிக்க அவர் கிட்டத்தட்ட முப்பது நிமிஷங்களும், வேட்டையாடப்பட்ட ஜீவராசி காட்டெருமையாக இருந்தால் ஏறத்தாழ இரண்டு மணித்தியாலங்களும் எடுப்பார். எனவே சிறிய ஜீவராசிகளுடன் அவர் நடத்திய போராட்டங்கள் சுருக்கமாக முடிவதனால் அவற்றைக் கேட்கவே அவன் பிரியப்படுவான். லோரன்ஸ் மரை இறைச்சி கொண்டு வருவதாகக் கூறி கடந்த இரண்டு வருடங்களாகின்றன. தன்னுடைய பற்கள் உதிர்ந்து பொக்கை விழுந்த பின்னராவது அவர் வேட்டையாடி மரையைக் கொண்டு சேர்த்து விடுவார் என அவன் நம்பிக்கை வைத்திருந்தான். பெரிய ஜீவராசிகளோடெல்லாம் போராட்டம் நடத்தும் லோரன்ஸ்க்கு எலி என்பது ஓர் அற்ப விஷயம் என அவன் நினைத்துக் கொண்டான்.

எலிப்பாஷணத்தைக் கலந்து வைக்கும் முறையைத்தான் லோரன்ஸ் அவனுக்குச் சிபாரிசு செய்தார். எலிப்பாஷணம் வாங்க மருந்துக் கடைக்குச் சென்ற போது கடைக்காரன் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தான். இரண்டு வாரமாகச் சவரம் செய்யாத முகத்துடன் தான் வந்து எலிப்பாஷணம் கேட்டிருக்கத் தேவையில்லை எனப் பின்னர் தான் அவனுக்கு உறைத்தது.

'எலிக்குத்தானே?' என்ற ஒரு அபத்தமான கேள்வியுடன் கடைக்காரன் மருந்துப் போத்தலைத் தந்தான்.

அன்றிரவு ஒரு கோப்பை உணவுடன் அவன் மருந்தைக் கலக்கும் போது லோரன்ஸூம் கூட இருந்தார்.

''இன்றைக்கு இரவைக்குப் பாருங்க முசுப்பாத்தியை'' என்றார்.

விடிந்தது.

உணவுப் பாத்திரத்தைச் சுற்றி வர எலிகளின் பட்டாளமொன்று செத்து வீழ்ந்து கிடக்கும் என்று நம்பிச் சென்றவனுக்குக் காலையில் ஏமாற்றம் தான் மிஞ்சியது. சோற்றுப் பருக்கைகள் இறைபட்டுக் கிடந்தன.

எலிகளின் ஆரவாரம் இப்போது இல்லாத போதிலும் அவன் உற் சாகமிழந்தவனாக ஒவ்வொரு நாளையும் கழித்தான். அவன் மனம் நாடியதெல்லாம் எலிகளின் பிணங்கள்.

சரியாக மூன்றாம் நாள் அலுவலகத்திலிருந்து வந்து வீட்டுக் கதவை திறந்த போது அவனுடைய மூக்கில் அந்தத் துர்நாற்றம் வந்து மோதியது. அவன் மூக்கைப் பிடித்துக் கொண்டு அறைக்குள் போனான். அந்தத் துர்நாற்றத்தின் பிறப்பிடம் மர அலுமாரியின் பின்புறம் தான் எனத் தோன்றிற்று. மெதுவாக அலுமாரியை நகர்த்தியதும் 'அது' அவனுக்குத் தெரிந்தது. அதன் உடலில் உண்டான புழுக்கள் நெளிந்தபடி இருந்தன. ஒரு தடித்த அட்டையில் எலியின் உடலை அள்ளி, வெளியில் கொண்டு வந்து போட்டான். திடீரெனத் தோன்றிய காகம் அதைக் கவ்விற்று.

வீட்டினுள் நுழைந்தவன் மீண்டும் துர்நாற்றம் வீசுவதை உணர்ந்தான். எலிகளின் உடல்களைத் தேடவேண்டிய நிர்ப்பந்தம் தனக்கு ஏற்பட்டு விட்டதை அவன் புரிந்து கொண்டான். தேடல் வேட்டை ஆரம்பமாயிற்று. எலிப்பாஷணத்தினால் அங்கும் இங்கும் செத்துப் போன எலிகளை மீட்பது எவ்வளவு, கடினமான வயிற்றைப் புரட்டும் வேலை என எண்ணி அவன் சலிப்புற்றான்.

மூஞ்சி கறுத்த ஓர் எலியின் உடல் பழைய பத்திரிக்கைகளின் இடுக்கில் கிடந்தது.இன்னொன்று அவனுடைய பழைய சப்பாத்துக்குள், மற்றது மோட்டு வளையுள் எல்லாவற்றையும் நல்லடக்கம் செய்தபின் அவன் தலை முழுகினான்.

அதன் பிறகு கொஞ்ச நாட்களாக எந்தப் பிரச்சினையும் எழவில்லை. அவனை யாராவது வந்து இது பற்றிக் கேட்டால் தொலைக்காட்சி நிருபருக்குப் பேட்டி அளிக்கும் பாவனையில் தோள்களைச் சற்றுக் குலுக்கிக் கொண்டு .... ஆம்.... மிகவும் மனவருத்தம் தான். ஆனால் இது தவிர்க்கப்பட முடியாதது. இந்த முடிவைத் தவிர வேறு எந்த முடிவும் எடுக்கப்பட முடியாதது. எனச் சொல்லுவதற்கு அவன் தயாராக இருந்தான்.

மூன்று வாரங்கள் போயிருக்கும். அவனுடைய எதிரி மறுபடியும் தோன்றிற்று. கண்ணாடிக் குவளையொன்றைத் தட்டிவிட்டுக் கண்ணெதிரே சுவர் ஏறி ஓடியது. தான் முறிந்து விழுவதைப் போல் உணர்ந்தான். அடுத்த கட்ட ஆலோசனைக்காக லோரன்ஸ் வீட்டுக்கு மறுபடியும் போக வேண்டி வரும் என அவன் நினைக்கவேயில்லை.

அவன் போனபோது லோரன்ஸ் கோழியொன்றை உரித்துக் கொண்டிருந்தார். அரைக்கால் பங்கு உயிருடன் கோழி மன்றாடிக் கொண்டிருந்தது.

விஷயத்தை அவன் லோரன்ஸிற்குச் சொன்னான். தான் சொல்வதை லோரன்ஸ் கவனிக்கின்றாரா அல்லது கோழியின் பித்தப்பை அகற்றுவதில் தான் கண்ணுங்கருத்துமாக இருக்கின்றாரா எனத் தீர்மானிக்க இயலாத நிலையில் அவன் இருந்தான்.

லோரன்ஸ் சாதாரணமாகப் பதில் சொன்னார். '' ஒரு சுலபமான வழி இருக்கின்றது பூனை வளர்த்தால் எலி கிட்டேயும் வராது. பூனை ஒன்றை வளருங்கள்''

இது ஒரு புதுவிதமான அணுகு முறை என்றே அவனுக்கும் பட்டது. பூனையை உடனே அவன் வரவழைத்து விட்டான். அதற்கு ஓர் ஆங்கிலப் பெயரை அவன் சூட்டினான். தமிழ்ப் பெயர்கள் செல்லப் பிராணிகளுக்கு ஏனோ அவ்வளவு பொருந்துவதில்லை.(தேவருடைய படங்களைத் தவிர).

பூனை வந்ததும் வீடு முழுக்க மியாவ் மியாவ் சத்தத்தால் நிரம்பியது. எலிகளின் கீச்சிடலை விட பூனைகளின் மியாவ் மியாவ் எவ்வளவோ மேலானது என அவன் நினைத்துக் கொண்டான். வீட்டின் சகல பகுதிகளுக்கும் சென்று பூனை உரிமை கொண்டாடிற்று. அது தன் கட்டிலில் சில வேளைகளில் சுருண்டு படுப்பதைக் கூட அவன் பொறுத்துக் கொண்டான். ஜேம்ஸ்பாண்ட் படத்து வில்லன் போல் மடியில் அதைத் தூக்கி வைத்து, தடவவும், கொஞ்சவும் அவன் தயாராய் இருந்தான்.

அது ஒரு ஞாயிற்றுக் கிழமை, அதிகாலையில் தேவாலயம் சென்று பசியுடன் திரும்பியவனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. கறிச்சட்டியில் இருந்தவற்றை காலி பண்ணிய திருப்தியுடன் இவனை நிமிர்ந்து பார்த்து ''மியாவ்'' என்றது சனியன்.

வெறிபிடித்தவனைப் போல பூனையை அவன் துரத்தினான், சாது வேஷத்துடன் மியாவ் மியாவ் என்று பதிலுக்குக் கத்தியபடி அவனிடமிருந்து தப்பி ஓடியது அந்தப் பூனை. அவ்வளவும் பாசாங்கு ! 'திருட்டுப் பூனையே ஒழிந்து போ' என அவன் பொல்லால் எறிந்தான். அதன் பின்பும் கொஞ்ச நாட்கள் வரை அது வீட்டைச் சுற்றி சுற்றி வந்தது. பின்னர் ஒரு நாள் காணாமலே போயிற்று.

லோரன்ஸிடம் இனிப் போனால் நாய் வளர்க்கும் ஆலோசனையைச் சமர்ப்பிக்கக் கூடும் என அவனுக்குத் தோன்றிற்று. அவன் சுயமாக ஒரு முடிவுக்கு வந்தான். பின்னால் இருக்கும் பாழ்வளவை சுத்தப்படுத்திவிட்டால் எலிகள் மட்டுமல்ல, அவன் அருவருக்கும் எந்த ஜீவராசிகளும் இனித் தலை காட்டப் போவதில்லை.

கூலியாட்களை அவன் வரவழைத்தான். பாழ்வளவைத் துப்புரவு செய்யும் வேலை தொடங்கிற்று. வேலியில் படர்ந்திருந்த கல்யாணப்பற்றையில் அவர்கள் ஆரம்பித்தார்கள். வளவைச் சுத்தம் பண்ணும் போது நிறையப் பொந்தெலிகளும், பாம்புகளும் அகப்பட்டதாகக் கூலிக்காரர்கள் சொன்னார்கள். ஆனால் அவன் பார்க்கவில்லை.

குப்பைகள் ஒரு மூலைக்குள் கூட்டியெடுக்கப்பட்டு அன்று மாலை தீயிடப் பட்டது. நத்தைகளின் ஓடுகள் வெடிக்கும் சத்தம் வெகுநேரம் வரை கேட்டது.

அதன் பின்பே அவன் நிம்மதி அடைந்தான். ஒரு நாள் லோரன்ஸிடம் காட்டை அழித்தது குறித்து வேடிக்கையாகச் சொன்னான். ''முதலில் செய்ய வேண்டிய காரியத்தை நாம் கடைசியாகச் செய்திருக்கின்றோம்.''

அதன் பின்னர் அவன் எலிகள் பற்றி மறந்தே போனான்.

வோல்ட் டிஸ்னியின் படம் பார்க்கும் போது மாத்திரம் எலியின் ஞாபகம் வந்தது. எல்லா எலிகளும் வோல்ட் டிஸ்னியின் மிக்கி மௌஸைப் போல இருந்தால் என்ன என்று அப்போது நினைத்துக் கொண்டான்.

வீட்டின் பின்புறம் ஒருநாள் தற்செயலாகப் பார்த்தவன் மறுபடியும் உன்னிப்பாக பார்வையைச் செலுத்தினான். 'பச்சைகள்' மறுபடியும் தலை தூக்கியிருந்தன. மண்ணுக்குள் வேர்களை விட்டுவைத்தால்தான் தங்களுக்கு மறுபடியும் வேலை வரும் என யோசித்த கூலிக்காரர்களின் தந்திரத்தை, சாமர்த்தியத்தை எண்ணி அவன் புன்னகைத்தான்.

அன்றிரவு பத்துமணியளவில் கட்டிலில் அவன் காலடியில் தொப்பென ஏதோ விழுந்தது. அவன் திடுக்கிட்டு எழுந்து விளக்கைப் போட்டான். எலியொன்று ஓடி மறைந்தது. 'மறுபடியும் எலி' என அவன் ஈனசுரத்தில் முனகிக் கொண்டான்.

இப்போது எலிகளை அழிக்கும் எண்ணம் அவனிடம் இல்லாமல் போயிற்று. எலிகளிடமிருந்து தன்னை எவ்வாறு காப்பது என்ற பயம் மேலோங்கத் தொடங்கியிருந்தது.

அரும்பதங்கள்

கொன்வென்ற்	- கன்னியர் இல்லம்
சாகஸம்	- வீரதீரச்செயல்
அவஸ்தை	- வேதனை
அகோரம்	- அவலட்சணம்
நாகாஸ்திரம்	- இலக்கியங்களில் பேசப்படும் விசேட ஆயுதம்
முசுப்பாத்தி	- வேடிக்கை அல்லது பகிடி
ஜீவகாருண்யம்	- உயிர்கள் மீதான கருணை
(எலிப்)பாஷாணம்	- (எலி)மருந்து
மடு	- குழி

பொருளுணர் திறன் செயற்பாடு

1. எலிகளை ஒழிக்க மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றிய விபரிப்பில் இழையோடும் அங்கதத்தினை சுருக்கமாக விளக்குக.
2. ''முதலில் செய்ய வேண்டிய காரியத்தைக் கடைசியில் செய்திருக்கின்றோம்'' என்று கூறப்பட்டது ஏன்? விளக்குக.
3. ''மறுபடியும் பொறி கருவாட்டுத்துண்டு வைத்து நாணேற்றப்பட்டது'' ''கர்ணனுக்குக் கிடைத்த நாகஸ்திரத்தை ஒத்த எலிப்பொறி'' இக் கூற்றுக்களால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
4. பின்வரும் கூற்றுக்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களை விளக்குக.
   அ. நம்பவில்லையா? நம்பமாட்டீர்கள்; இரண்டு எலிகள் ஒரே ராத்திரியில் முடித்து விட்டேன்.
   ஆ. இன்றைக்கு இரவைக்குப் பாருங்கள் முசுப்பாத்தியை.
   இ. ஒரு சுலபமான வழி இருக்கின்றது; பூனை வளர்த்தால் எலி கிட்டேயும் வராது.
5. கதையில் கையாளப்பட்ட மொழிநடை பற்றிய உமது கருத்துக்களை விபரிக்குக.

குழுமச் செயற்பாடு

இக்கதையைப் பின்புலமாகக் கொண்டு ''தாளலயமொன்றை'' இயற்றி நிகழ்த்திக் காட்டுவோம்.

திறன் வளர் செயற்பாடு

இக்கதையை வாசித்து விளங்கி விமர்சனம் ஒன்று எழுதுவோம்.

10 நலம் புனைந்து உரைத்தல்

திருவள்ளுவர்

திருவள்ளுவர் சங்கமருவிய காலத்தில் வாழ்ந்தவர். இவர் எந்தச் சமயத்தையும் சாராதவர் என்ற கருத்தும் நிலவுகிறது. வள்ளுவர் தொடர்பாக அதிகமான கர்ண பரம்பரைக் கதைகளே உண்டு. வள்ளுவனின் கவிதா ஆளுமையில் தன்னைப் பறிகொடுத்த மஹாகவி பாரதியாரும் ''*யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவனைப் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணும் பிறந்ததில்லை*'' என்கின்றார். திருவள்ளுவமாலை என்ற நூலில் 53 புலவர்கள் வள்ளுவரின் புலமையைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

திருக்குறளில் காமத்துப்பால் என்ற அதிகாரத்தில் இடம்பெறும் நலம் புனைந்துரைத்தல் என்ற இவ்வதிகாரம் தலைவன் தன் தலைவியின் பேரழகை புகழ்ந்துரைப்பதாக அமைந்துள்ளது.

1. **நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்**
மென்னீரள் யாம்வீழ் பவள்.

அனிச்சமே!	=	அனிச்சப்பூவே!
வாழி	=	நீ வாழ்வாயாக,
நல் நீரை	=	(மென்மைத் தன்மையால் நீ எல்லாப் பூவினும்) நல்ல குணமுடைய (ஆயினும்)
யாம் வீழ்பவள்	=	எம்மால் விரும்பப்பட்டவள்
நின்னினும்	=	உன்னைக் காட்டிலும்
மெல் நீரள்	=	மென்மைத் தன்மையை உடையவள்.

பொருள்

அனிச்சமே! நீ மிக மென்மையாக உள்ள பூவாயினும், என்னால் விரும்பப்படும் இவள் உன்னைக் காட்டிலும் மென்மைத் தன்மை உடையவள்.

2. **மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்**
பலர்காணும் பூவொக்கும் என்று.

நெஞ்சே!	=	என் நெஞ்சமே!
இவள் கண்	=	(நானே காணப்பெற்ற) இவள் கண்கள்
பலர் காணும்	=	பலரும் காண்கின்ற
பூ ஒக்கும் என்று	=	மலர்களை ஒத்திருக்கின்றன என்று எண்ணி
மலர் காணின்	=	(தாமரை , குவளை, நீலம் முதலிய) மலர்களைக் கண்டால்
மையாத்தி	=	மயங்கி நின்றாய். (உன் அறிவு இருந்த விதம் என்ன?)

பொருள்

நெஞ்சே! இவள் கண்கள் தாமரை முதலிய மலர்களைப் போன்றிருக்கின்றன என்று மயங்கிவிட்டாய். இவள் கண்ணுக்கு அவை ஒப்பாக மாட்டா.

3. **முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்**
வேல்உண்கண் வேய்த்தோ ளவட்கு.

வேய்த்தோள் அவட்கு	=	மூங்கிலைப் போன்ற தோள்களை உடையவளுக்கு
மேனி	=	உடலின் நிறம்
முறி	=	தளிரேதான்
முறுவல்	=	பல்

முத்தம்	=	முத்தே தான்
நாற்றம்	=	இயல்பான மணம்
வெறி	=	நறுமணமாக இருக்கும்
உண்கண்	=	மை பூசப்பட்ட கண் வேலேதான்.

பொருள்

மூங்கிலைப் போன்ற தோளை உடையவளுக்கு உடல் நிறம் தளிரேதான்; பல் முத்தேதான்; இயற்கை மணம் மிகுதியானது; கண் வேலே தான்.

4. **காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்**
மாண்இழை கண்ஒவ்வேம் என்று.

குவளை	=	குவளை மலர்கள்
காணின்	=	காணும் இயல்பைப் பெற்றுக் காணுமானால்
மாண்	=	சிறப்பமைந்த
இழை	=	அணிகலன்களை உடையவளது
கண்	=	கண்ணுக்கு
ஒவ்வேம் என்று	=	**யாம்** ஒப்பாக மாட்டோம் என்று எண்ணி
கவிழ்ந்து	=	தலைகுனிந்து
நிலன் நோக்கும்	=	(நாணத்தால்) நிலத்தைப் பார்க்கும்,

பொருள்

ஆபரணங்களை அணிந்த மாட்சிமைப் பெற்ற இவளது அழகை குவளை மலர்கள் கண்டால் இவளுக்கு நாம் ஒப்பாக மாட்டோம் என்று தலைகுனிந்து கொள்ளும்.

5. **அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு**
நல்ல படாஅ பறை.

அனிச்சப் பூ	=	(இவள் தன் மென்மைத் தன்மையைக் கருதாமல்) அனிச்சப்பூவை
கால்	=	காம்பை
களையாள்	=	நீக்காமல்
பெய்தாள்	=	(கூந்தலில்) சூடிக்கொண்டாள்
நுசுப்பிற்கு	=	(ஆதலால்) இவளுடைய இடுப்பிற்கு
நல்ல பறை	=	நல்ல பறைகள் (மேளங்கள்)
படாஅ	=	ஒலிக்க மாட்டா,

பொருள்

இவள் தன் மென்மையைக் கருதாமல் அனிச்சப் பூவைக் காம்பு நீக்காமல் சூடிக்கொண்டதால் இடுப்பு ஒடியும். ஆதலால், இடுப்பின் முறிவிற்கு நல்ல பறைகள் ஒலிக்க மாட்டா.

6. **மதியும் மடந்தை முகனும் அறியா**
   பதியின் கலங்கிய மீன்.

மீன்	=	நட்சத்திரங்கள்
மதியும்	=	சந்திரனுக்கும்
மடந்தை முகனும்	=	இவளுடைய முகத்துக்கும்
அறியா	=	வேறுபாடு அறியாமல்
பதியின்	=	தம் நிலையினின்றும்
கலங்கிய	=	கலங்கித் திரிகின்றன.

பொருள்

வானத்து நட்சத்திரங்கள் நிலவையும் எமது மடந்தை முகத்தினையும் இதுதான் நிலவு, இதுதான் முகம் என்று அறிந்துகொள்ள முடியாது மயங்கித் திரிகின்றன.

7. **அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல**
   மறு உண்டோ மாதர் முகத்து.

அறுவாய்	=	குறைந்த இடமெல்லாம்
நிறைந்த	=	படிப்படியாக நிறைந்து தோன்றும்
அவிர்	=	ஒளி வீசும்
மதிக்குப் போல	=	சந்திரனுக்கு இருப்பதைப் போல
மாதர் முகத்து	=	இப்பெண்ணின் முகத்தில்
மறு உண்டோ?	=	களங்கம் உண்டோ? (இல்லையே!)

பொருள்

சந்திரனிடத்து இருப்பதைப்போல இப்பெண்ணின் முகத்தில் எவ்விதக் கறையும் இல்லையே!



8. **மாதர் முகம் போல ஒளிவிட வல்லையேல்**
காதலை வாழி மதி.

மதி!	=	மதியே!
வாழி	=	நீ வாழ்வாயாக
மாதர் முகம் போல்	=	இப்பெண்ணின் முகத்தைப்போல
ஒளிவிட வல்லையேல்	=	ஒளிவீச உன்னால் முடியுமானால்
காதலை	=	நீயும் என் காதலுக்கு உரிமை பெறுவாய்.

பொருள்

நிலவே நீ என் தலைவியைப் போல ஒளிவீசுவாயானால் நீயும் என் காதலுக்கு உரியவளாய் இருப்பாய்.

9. **மலர்அன்ன கண்ணாள் முகம்ஒத்தி யாயின்**
பலர்காணத் தோன்றல் மதி.

மதி!	=	சந்திரனே!
மலர் அன்ன கண்ணாள்	=	மலர் போன்ற கண்ணையுடைய இவளின்
முகம் ஒத்தியாயின்	=	முகத்தைப் போன்றிருக்க விரும்புவாயானால்
பலர் காணத்தோன்றல்	=	பலரும் காணும்படியாகத் தோன்றாதிருப்பாயாக.

பொருள்

சந்திரனே! மலர் போன்ற கண்களையுடைய இவள் முகத்தைப் போன்று இருக்க நீ விரும்பினால் பலரும் காணும்படி தோன்றாதே.

10. **அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்**
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

அனிச்சமும்	=	*(மிக மென்மையுள்ள) அனிச்சப் பூவும்,*
அன்னத்தின் தூவியும்	=	*அன்னப் பறவையின் சிறகும்,*
மாதர் அடிக்கு	=	*இப் பெண்ணின் அடிகளுக்கு,*
நெருஞ்சிப் பழம்	=	*நெருஞ்சி முள்போல வருத்தம் செய்யும்.*

பொருள்

அனிச்சப் பூவும், அன்னத்தின் சிறகும் மிக மென்மையாயினும், அவை நெருஞ்சி முள்போல இவள் அடிகளை வருத்தும்.

பொருளுணர் திறன் செயற்பாடு

1. *தலைவன் தலைவியின் நலங்களை எவ்வாறெல்லாம் புனைந்துரைக்கிறான்?*
2. *தலைவியின் பாதங்களை நெருஞ்சி முட்கள் போல் உறுத்துவன எவை என வள்ளுவர் கூறியுள்ளார்.*
3. **அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல**
   மறு உண்டோ மாதர் முகத்து.
   அ. இக்குறளின் பொருளை உமது மொழிநடையில் எழுதுக.
   ஆ. பெண்ணின் அழகை விபரிக்குமாற்றிலுள்ள சிறப்புக்களை விளக்குக.
4. *இவ்வதிகாரத்தில் கையாளப்பட்டுள்ள அணிகள் எவை? அவற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.*
5. *இக்குறள்களில் இழையோடும் வள்ளுவரின் கற்பனையாற்றலை உதாரணம் தந்து விளக்குக.*

குழுமச் செயற்பாடு

அறத்துப்பாலில் விரும்பிய அதிகாரங்களைத் தெரிவு செய்து, உவமைகள் இடம்பெறும் பத்துக் குறள்களையும், அவற்றின் சிறப்புக்களையும் எழுதிக் காட்சிப்படுத்துவோம்.

திறன் வளர் செயற்பாடு

தெரிவு செய்த குறள்களின் கருத்துக்களைக் கொண்ட கவிதை ஒன்றினை ஆக்குவோம்.

11 புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்

குறிஞ்சித் தென்னவன் (1934 - 1998)

இவர் மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்தின் நோர்வூட் - தென் மதுரைத் தோட்டத்தில் பிறந்தார். தனது 11 ஆவது வயதிலேயே தோட்டத் தொழிலாளியாகப் பெயர் பதிந்துகொண்ட இவர், தான் அனுபவித்த வேதனைகளை மையப்படுத்தி கவிதைகளை எழுதத் தொடங்கினார். நாடகங்களையும், பக்திப் பாடல்களையும் குறும்பாக்களையும் எழுதியுள்ள போதிலும் கவிதைகளே இவரது ஆளுமையைப் பறைசாற்றி நிற்கின்றன. சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் இவரது கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. குறிஞ்சித் தென்னவன் கவிச்சரங்கள் என்ற பெயரில் சாரல் நாடன் இவரது கவிதைகளைத் தொகுப்பாக வெளியிட்டுள்ளார். இலக்கிய வித்தகர், கலா பூஷணம் ஆகிய மகுடங்கள் இம்மக்கள் கவிஞனுக்குக் கிடைத்த கௌரவங்களாகும்.

இக்கவிதை தோட்டத் தொழிலாளிப் பெண்களின் வேதனைகளையும் அதிலிருந்து மீளத்துடிக்கும் அவர்களது வேட்கையையும் வெளிப்படுத்துகிறது.

காலையிலே பனி காயுமுன்னே குளிர்
காற்றைக் கிழித்துமே ஓடுகின்றோம்! - தொழிற்
சாலையிலே சங்கு ஊது முன்னே பசுந்
தங்கத் தளிரினை கிள்ளிடுவோம்!

வெண்டை விரல்கள் விறைத்திடினும் எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும், - இரு
கெண்டை விழிகள் பளபளக்கும், தளிர்
கிள்ளவோ கைகள் பரபரக்கும்!

கூடை அசைந்து பக்கத்திலும் வந்து
கூட்டும் 'கிறுக் கிறுக்' கோசையிலே-நெஞ்ச
மேடையிலே சதி ராடுமெண் ணங்களின்
வேதனை துன்ப ஒலிகேட்கும்!

பக்க நிரைச்செடி சிக்கிடும் போதிலும்
பக்குவ மாகவி லக்கிச் செல்வோம் - எம்மைச்
சிக்கவைத் திருக்கும் அடிமைத் தளையினை
தூக்கி யெறியத் துணிவு கொள்வோம்!

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
மேலுறும் எண்ணம் எங்கள் மனதில், - இனி
முட்டித் ததும்பி முளைத்து விடும் எம்மை
மூடிய பேரிருள் ஓட்டிடுவோம்

என்றும் அடிமைச் சிறையினி லேவைத்த
எத்தர்கள் கொட்ட மடக்கிடவே பெருங்
குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன்வருவோம்!

பெண்ணுக்கு கல்வி பெருந்தீது, உரிமை
பேசிடி லோஅது பெருந்தவறு, என்ற
எண்ணம் படைத்தவர் மண்ணிற் புதைந்திட
எண்ணற் கரிய கலைபடைப்போம்!

சாதிச் சமய சங்கறுத்து, பெண்கள்
தாழ்வுயெனும் தீய போக்கொழித்து; இம்
மேதினி யில்புது மாற்றம் படைத்து பெண்
விடுதலைக் கீதம் இசைத்திடுவோம்!

பெண்ணுக்கு இங்கோர் தனிநீதி - என
பேசிடும் நூல்கள் எவையெனினும் - அவை
மண்ணில் புதைத்து மகிழ்ந்திடுவோம் - நவ
மாதர் அறங்கள் படைத்திடுவோம்!

போலித் தலைமை பொசுக்கிடுவோம் - இவர்
பொய்மைத் திரையைக் கிழித்தெறிவோம்!
பாலித்திடுவோம் புதுயுகத்தை, மலைப்
பாவையர் வாழ்வில் உயர்ந்திடுவோம்!

பொருளுணர் திறன் செயற்பாடு

1. *கவிதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.*
அ. மலையகத் தொழிலாளிப் பெண்களின் கடின உழைப்பு
ஆ. விடுதலை வேட்கை
இ. பெண் உரிமைச் சிந்தனைகள்

2. *கவிதையைச் சிறப்பிக்கும் பின்வரும் கூறுகளை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுக.*
அ. உவமை உருவகங்கள்
ஆ. ஓசை நயம்

குழுமச் செயற்பாடு

மலையக வாழ்வியலைச் சித்திரிக்கும் நாவல், சிறுகதை, கவிதை, புகைப்படங்கள், ஓவியங்கள் முதலியவற்றைத் திரட்டிக் கண்காட்சி ஒன்றினை நடாத்துவோம்.

திறன் வளர் செயற்பாடு

''பொங்குவோம் சோதரிகளே'' என்ற தலைப்பில் வகுப்பறையில் கவியரங்கம் ஒன்றினை நிகழ்த்துவோம்.